| | இப்பின்புலங்களில் மனிதத் தன்னிலைகள் கூட்டுச் சமூகங்களாகவும் தொழில்சார் தனித் திரள்களாகவும் இணைந்தும் விலகியும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் வளர்ச்சி, முன்னேற்றம், முரண்பாடுகள், மோதல்கள், மனித உரிமை மீறல்கள் எனப் பல விடயங்கள் தொழிற்படுகின்றன. இனக்குழுக்களின் அடையாளங்கள் நெருக்கடிக்கும் மனித உரிமை கேள்விக்கும் உரியதாக மாறிவிடுகிறது. அவற்றை நாவல்கள் பிரதிபலித்துள்ளன. இவற்றை ஆய்வு செய்வது எனும் நோக்கம் நிறைவேறியுள்ளது. இந்தியாவின் கடைக்கோடியான தென்நிலப்பகுதிகளில் வாழ்ந்து வரும் பல்வேறு வட்டாரம்சார் சமூகங்களை ஆய்வு செய்வது தமிழகத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றும் எனும் நோக்கம் ஆய்வில் பிரதானப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>பாண்டியர்களின் நாடாக இந்நிலவெளிகள் வெகுகாலம் திரட்சிபெற்றிருந்தன. அதனால் வரலாற்றின் திசைகளில் வைத்து இவ்வட்டாரங்களில் ஏற்பட்ட தொழில், பொருளாதாரம், அரசியல், பண்பாட்டு நிலைகள் மீது ஆய்வு மையம் கொண்டுள்ளது. பல்விதச் சமயச் சாயல்களும் நாட்டார் வழக்காறுகளும் உலகின் பிறநாடுகளில் அழிந்து வருவதைப் போன்று அல்லாமல் தென்னகத்தில் வாழ்ந்தும் வளர்ந்தும் வருகின்றன என்பதைக் கண்டுகொள்ள முடிந்தது. அவை நாவல்களில் பெரிதும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றை இனவரைவியல் களஆய்வுத் தகவல்களுடன் ஆய்வு செய்து தென்னகத்தைப் புரிந்துகொள்ள முயற்சித்தபோது பல்கலைக்கழக மானியக்குழுவின் (UGC) இப்பேராய்வுத்திட்டம் நல்வாய்ப்பை நல்கியது. இப் பேராய்வுத்திட்டத்தின் மூலம் தென்னகச் சமூவியலின் அசைவாக்கத்தைப் கதைகளின் வழி தொகுக்க, முதன்மை நோக்கம் நிறைவேறியுள்ளது. |
| 13 | Achievements from the Project<br>Details Enclosed Below<br><br>இப்பேராய்வுத் திட்டம் நிறைவேற்றியுள்ள செயல்கள் :<br><br>1. மேற்கு மலைத் தொடர்களில் வாழும் பளியர்கள், முதுவர்கள், மூப்பர்கள் போன்ற மலைவாழ் குழுக்கள் இதுவரை நவீனப் புனைவுகள் ஊடாகப் பதிவு செய்யப்படவில்லை. லஷ்மி சரவணக்குமாரின் கானகன், சு.வேணுகோபாலின் வலசை, எஸ்.செந்தில்குமாரின் கழுதைப்பாதை போன்ற நாவல்களில் மலைவாழ்ப் பழங்குடிகளின் மொழி, வழிபாட்டுமுறைகள், சடங்குகள், தொழில்சார் வேலைகள், இயற்கை மாற்றங்கள், மலைவாழ் உரிமை இழப்புகள், அடையாளநெருக்கடிகள், தங்கள் மீதான பிறகுழுக்களின் மீறல்கள் என இனக்குழுவரைவியல் தன்மையில் ஆய்வு செய்திருப்பது தனித்துவமிக்கது. நிலத்தில் வாழ்ந்த குடிகள் தேயிலைத்தோட்டங்களுக்காகப் புலம்பெயர்த்தப்பட்ட அவலங்களை டி.செல்வராஜின் தேநீர், டேனியலின் எரியும் பனிக்காடு ஆகிய நாவல்கள் வழியில் சொந்த நிலத்திற்குள்ளே பிறிதொரு புலம்பெயர்ச் சிதைவுகளையும் இயற்கை சார் நெருக்கடிகளையும் விவாதித்திருப்பது தனித்துவம் வாய்ந்தது.<br><br>2. தென்னகத்தில் காணப்படும் வேளாண் நிலங்கள் மற்றும் பல்வேறு காடுகளின் அமைப்பிற்கும் இனத்தொகுதிகளுக்கும் பண்பாட்டு உறவு உண்டு. வேளாண் நிலங்கள் மற்றும் காடுகளை ஆதாரமாகக் கொண்ட இனக்குழுக்களின் வாழ்வியலைப் பேசும் நாவல்கள் முக்கியமானவை. கி.ராஜநாராயணனின் கோபல்லகிராமம், பூமணியின் வெக்கை, அஞ்ஞாடி, ஜெயமோகனின் ரப்பர், காடு, ஊமைச்செந்நாய், சோ.தர்மனின் தூர்வை, கூகை, சூல், பாமாவின் கருக்கு, சங்கதி, ராஜ்கவுதமனின் சிலுவைராஜ் சரித்திரம், சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள், ஏக்நாத்தின் கெடைகாடு ஆகிய நாவல்களில் |

பல்வேறு இனக்குழுக்களின் இனவரைவியல் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ள மனித உரிமைகளை ஆய்வாகத் தொகுத்திருப்பது சிறப்பான ஒன்று. மருத நிலங்களையும், கரிசல் காடுகளையும் பனங்காடுகளையும், புஞ்சைக் காடுகளையும் நம்பி வாழ்ந்த பூர்வ குடிகளின் சமகால நெருக்கடிகளை களஆய்வுத் தகவல்களைக் கொண்டு உரையாடியிருப்பது ஆய்வு உலகிற்கு அவசியமான ஒன்று.

3. தென்னகத்தின் பல பகுதிகள் வறண்ட நிலவியலைக் கொண்டவை. பாலை போன்ற நிலவெளி அவை. சாத்தூர், கமுதி, சிவகங்கை, இராமநாதபுரம், சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி, கழுகுமலை வட்டாராங்கள், உசிலம்பட்டி வட்டாரங்கள் எனப் பல பகுதிகள் மழை மறைவு பிரதேசங்களைக் கொண்டவை. வறண்ட நிலங்களை ஆதாரமாகக் கொண்ட இனத்தொகுதிகளை கதைகள் பதிவு செய்துள்ளன. கோணங்கியின் கதைகள், ச.தமிழ்ச்செல்வனின் கதைகள், எஸ்.ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி, மு.ராஜேந்திரனின் வடகரை, 1801, வேல.ராமமூர்த்தியின் குற்றப்பரம்பரை, வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர் போன்ற நாவல்களில் இடம் பெற்ற இனக்குழுக்கள் போர் எதிர்ப்பு சமூகங்களாக அறியப்பட்டு ஆங்கிலேயர் காலத்தில் குற்றச் சமூகங்களாக மாற்றப்பட்ட நெருக்கடிகளைக் களத்தகவல்களுடன் ஆய்வு கவனப்படுத்தியிருப்பது முதன்மையான ஒன்றே.

4. தென்தமிழகம் நீண்ட கடல் பரப்பைக் கொண்டது. இராமநாதபுரம் தொடங்கி கன்னியாகுமரிவரை அமைந்து கிடப்பது. கடல் வாழ் பரதவர்கள் அவர்களின் கிளைசாதிக் குழுக்கள் பல தொகுதிகளாக இப்பரந்த கடல்வெளிகளில் வாழ்ந்து வருகின்றனர். முற்காலப் பாண்டியர்காலம் தொடங்கி டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர்கள் எனப் பல்வேறு காலனிகளை எதிர்கொண்ட நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டவர்கள் பரதவ இனக்குழுக்கள். இவர்கள் குறித்த நாவல்களான போதி சத்துவ மைத்ரேயாவின் சிப்பியின் வயிற்றில் முத்து, இராஜம் கிருஸ்ணனின் அலைவாய்க்கரையிலே, பொன்னீலனின் தேடல், வண்ணநிலவனின் கடல்புரத்தில், ஸ்ரீதர கணேசனின் வாங்கல், தோப்பில்முகமது மீரானின் ஒரு கடலோரகிராமத்தின் கதை, ஜோ.டி.குரூஸின் ஆழி சூழ் உலகு, கிறிஸ்டோபர் ஆண்றனியின் துறைவன் போன்றவை பரதவ இனத்தொகுதிகளின் பண்பாட்டு மானிடவியலைக் காட்டுபவை. அவர்களின் வாழ்வியல் கடந்த நூற்றாண்டுகளில் அடைந்த மாற்றங்களைத் தொழில்சார் பின்னடைவுகளை அடையாளம் சார்ந்த போராட்டங்களை ஆய்வு எடுத்துக்கொண்டுள்ளது முக்கியச் செயல்பாடு.

5. இந்தியாவில் நகரமயமாதல் அதிகமாக நடந்தது தமிழகத்தில்தான். சிறுநகரங்கள் தொடங்கி பெருநகரங்கள் வரை தென்மாவட்டங்களில் காணப்படுகிறது. இந்நகரங்கள் பல்வேறு இனத்தொகுதிகளை நகரப் பணிகளுக்காக அமைத்துக் கொண்டன. அந்த வகையில் குறவர்கள், அருந்ததியர்கள், தோட்டிகள் போன்ற இனக்குழுக்களின் பாடுகளையும் சிதைவுகளையும் நாவல்கள் பதிவு செய்துள்ளன. பாண்டிக்கண்ணனின் சலவான், மழைப்பறை, அறிவழகனின் கழிசடை, மாற்குவின் யாத்திரை, பிச்சைக்காரர்கள் குறித்த ஜெயமோகனின் ஏழாம் உலகம், கள்ளர்கள் குறித்த சு.வெங்கடேசனின் காவல்கோட்டம், லஷ்மி சரவணக்குமாரின் உப்புநாய்கள், மனப்பிறழ்வாளர்கள் குறித்த உதயசங்கரின் கதைகள், கி.ராவின் பேதை, சு.வேணுகோபாலின் தொப்புள்கொடி, நாஞ்சில் நாடனின் இடாலக்குடி ராசா, நாவிதர்கள் பற்றிய சு.வேணுகோபாலின் திசையெல்லாம் நெருஞ்சி, குறவர்கள் குறித்த பிரேம் ரமேஷின் குருவிக்கார சீமாட்டி, நகரங்களுக்குள் வந்து செல்லும் நாடோடிகளான பகல் வேசக்காரர்கள் பற்றிய சா.கந்தசாமியின் பாய்ச்சல்,பவா செல்லத்துரையின் ஏழுமலைஜமா, சாட்டையடிக்காரர்கள், பக்கீர்ஷாக்கள் என நகரமும்

விளிம்பு நிலை மக்கள் குழுக்களும் பிரிக்கமுடியாதவை. அவற்றைக் களத்தரவுகளுடன் ஆய்வு தொகுத்திருப்பது சாலச் சிறந்த ஒன்று.

6. மலை,காடு,வேளாண் நிலம், வறண்ட நிலம், கடல், நகரங்கள் எனத் தென்தமிழ்நாட்டைப் பகுத்துக் கொண்டு அந்ததந்தப் புவிப்பரப்பில் இனத்தொகுதிகளை வகைப்படுத்தி இலக்கியம் பெறும் இடம் என்னவாக இருக்கிறது, இலக்கியத்தின் சமூவியல் பணி என்ன என்பதை பகுத்திருப்பது இவ்வாய்வுத்திட்டத்தின் சாதனை எனலாம். தென் தமிழ்நாட்டின் பன்முகப் பண்பாடு, இனத்தொகுதிகளின் கொள்வினைக் கொடுப்பினைகளாலே அமைந்துள்ளன. இனக்குழுக்களின் இணைவும் விலகலுமான இயக்கமே தென்னகத்தின் சமூக அசைவாக்கங்களாக இருப்பதை ஆய்வு வெளிக்கொணர்ந்துள்ளது.

14. Summary of the Findings: Details Enclosed Below

**ஆய்வின் சாரம்** : "Problems of Identities and Human Rights of Ethnics in Modern Tamil Fiction – A Field Study in Southern Districts "

**தமிழ் நாவல்களில் இனக்குழுக்களின் அடையாளச் சிக்கல்களும் மனித உரிமைகளும்**
**- கள ஆய்வாகத் தென் மாவட்டங்களை முன்வைத்து:**

தென்னகத்தில் வாழும் பல்வேறு இனக்குழுக்களின் வாழ்வியலை நாவல்கள் மூலம் இந்த ஆய்வு கவனப்படுத்தியுள்ளது. மலைவாழ் மக்கள், பழங்குடிகள், மீனவர்கள், விவசாயிகள், தலித்கள், புலம் பெயர்ந்தவர்கள், அகதிகள், நாடோடிகள், பிச்சைக்காரர்கள், சாட்டையடிக்காரர்கள், சலவைத் தொழிலாளிகள், நாவிதர்கள், வேசக்காரர்கள், பக்கீர்ஷாக்கள், அபலைப்பெண்கள், பல மொழி பேசுபவர்கள், சிறுபான்மையினர் போன்ற இனக்குழுத்திரட்சிகளின் அடையாளங்கள் அவர்களின் மனித உரிமைச் சிக்கல்களைத் தமிழ் நாவல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இரண்டாயிரத்திற்குப் பின்பு முதன்மைப்படுத்தியுள்ளன. இதற்கு முக்கிய காரணங்களாக தலித்தியம், பின்காலனியம், மானிடவியல் ஆகிய சிந்தனைகளின் பெருக்கம் இருக்கிறது. தொண்ணூறுகளில் தன்வரலாற்று நாவல்களும் தலித்திய நாவல்களும் நவீன இலக்கியத்தின் மையமானதன் தொடர்ச்சியாகப் பல்வேறு படைப்பாளிகள் தங்கள் இனக்குழு வாழ்வியலை நாவல்களாகப் பதிவு செய்யத் தொடங்கினர்.

ஒவ்வொரு இனக்குழுவும் பிற இனக்குழுவிலிருந்து வேறுபடும் தன்மைகளாலும் பிற இனக்குழுக்களோடு பகிர்ந்துகொள்ளும் தன்மைகளாலும் முழுமையான தமிழ்ச் சமூகமாக இயங்குவதை இரண்டாயிரத்திற்கு பின்பு வந்த நாவல்கள் மூலமாக இப் பேராய்வுத் திட்டம் வெளிக்கொணர்ந்துள்ளது. இவற்றை ஆவண நாவல்கள் என்று அடையாளப்படுத்தலாம். தென்தமிழகத்தைப் பின்புலமாகக் கொண்டு எழுதும் படைப்பாளிகள் அவர்கள் எழுதி வெளிவந்துள்ள சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்புகள் தென்மாவட்ட வாழ் மக்களின் சமூகவியல், நிலவியல், பண்பாட்டு மானிடவியலினைத் தொகுத்துள்ளன. படைப்புகள் இனக்குழுப் பிரச்சினைகளை எவ்வாறெல்லாம் பதிவு செய்துள்ளன என்பதை ஆய்வுக் களத்தரவுகளுடன் நிரூபித்துள்ளது. இனக்குழு வரைவியலைக் கதைகளாக்கிய கி.ராஜநாராயணன், பூமணி, சோ.தர்மன், டி.செல்வராஜ், பொன்னீலன், ஜெயமோகன், இராஜம் கிருஸ்ணன், பாமா, ராஜ்கவுதமன், சு.வேணுகோபால், ச.தமிழ்ச்செல்வன், கோணங்கி, ஜோ.டி.குரூஸ், சு.வெங்கடேசன், எஸ்.செந்தில்குமார், பெர்லின், அறிவழகன், ஸ்ரீதர கணேசன், வேலராமமூர்த்தி, பாண்டிக்கண்ணன், மு.இராஜேந்திரன் போன்ற படைப்பாளிகளின் படைப்புகள் எடுத்துக்கொண்ட இனக்குழுக்களின் அடையாளச் சிக்கல்கள், மனித உரிமை சார்

நெருக்கடிகளை, படைப்பாளிகளின் சார்புத்தன்மைகள், விடுபடல்கள் போன்ற கூறுகளை ஆராய்ந்து இலக்கியத்தின் சமூவியல் பண்பை ஆய்வு காட்டியுள்ளது. தங்கள் இனக்குழுவரைவியலையே பெரும்பாலான படைப்பாளிகள் பதிவு செய்துள்ளனர். புறத்தே இருந்து எழுதியவர்கள் குறைவு. இரண்டாயிரத்திற்குப் பின்பு தமிழ்ப் படைப்புலகில் நடந்த மிகப் பெரிய மாற்றம் இது.

ஒவ்வொரு இனக்குழுவிற்குள்ளும் வளமை, இல்லாமை என்ற முரண்கள் அக்குழுவிற்குள் பல வர்க்கம் சார் சிக்கல்களை உருவாக்கியுள்ளன. நிலம் சமநிலையற்று இருப்பது வெவ்வேறு இனக்குழுவிற்கிடையே மோதல்களை உருவாக்குகின்றன. பொருளதார வேறுபாடுகள் இனக்குழுக்களிடையே பிரிவினைகளை உருவாக்கியுள்ளன. பெரும்பாலான இனக்குழுக்களில் பெண்களை ஒடுக்குதல் என்பது இயல்பாக நடக்கிறது. உடல்சார்ந்த வாதைகளுக்கும் அவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். தென்மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களில் எந்த இனக்குழு பெரும்பான்மையாகவும் பொருளாதாரத் தன்னிறைவும் பெற்றுள்ளதோ அது சிறு இனக்குழுக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. பெரும்பாலான இனக்குழுக்களாலும் தலித்கள் ஒடுக்கப்படுதல் இருக்கிறது. திரளும்போது பிற இனக்குழுக்கள் ஒடுக்குதலைக் கைவிடுகின்றன. பாகுபாடுகளைப் பெரும்பாலான நாவல்கள் நடந்த சம்பவங்களின் பின்னணியில் படைத்திருக்கின்றன. சூழலியல் மாறுதல்கள் இனக்குழு வாழ்வியலில் திரிபுகளை தோற்றுவித்து வருகின்றன. ரப்பர், சூல் போன்ற நாவல்கள் இவற்றைக் காட்டியுள்ளன.

தென்னகத்தில் வாழும் இனக்குழுக்களிலே கடும் வாழ்வியல் நெருக்கடிகளைச் சந்தித்து வருபவர்களாக் குறவர்கள், அருந்ததியர்கள், பளியர்கள், குடுகுடுப்பைக்காரர்கள், தோட்டிகள், அரவாணிகள், சில நாடோடிகள் (சாட்டையடிக்காரர்கள், பூம்பூம்மாட்டுக்காரர்கள், நாழிமணிக்காரர்கள்) போன்ற குழுக்களை அடையாளப்படுத்தப்படமுடியும். இதற்கு அடுத்த நிலையில் விவசாயிகள், மீனவர்கள் இருக்கின்றனர். விவசாயிகளைத் தனித்த இனக்குழுவாகப் பார்க்கும்போது அவர்கள் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றனர். விதைகள், பயிரிடுதல், விற்பனைசெய்தல், பொருளாதார உதவி குறைந்து வரும் நிலை எனப் பல பின்னடைவுகளால் விவசாயிகள் அடையும் சிக்கல்களும் மனித உரிமை இழப்புகளும் காட்டப்பட்டுள்ளன. சு. வேணுகோபாலின் கதைகள் (புத்துயிர்ப்பு) ஒரு விவசாயினுடைய எழுத்தாகும். பரதவர்களின் வாழ்வியல் பெரும் மாற்றத்திற்கும் நெருக்கடிக்கும் உள்ளாகியிருக்கிறது. தென்தமிழ் நாட்டு இனக்குழுக்கள் குறித்து வந்த நாவல்களில் அதிகமான நாவல்கள் மீனவர்கள் குறித்துத்தான் வெளிவந்துள்ளன. மனப்பிறழ்வாளர்கள், அரவாணிகள் குறித்த படைப்புகள் குறைவு.

தென்தமிழ் நாட்டின் தாவர வழக்காறுகளும், உணவு வழக்காறுகளும், மலை, நிலம், கடல் சார்ந்த வேட்டைத் தொழிற்பாடுகளும் தனித்துவமாக கதைகளில் இடம் பெற்றுள்ளன. இவை தனித்த ஆய்விற்குரியவை. எல்லாவித நெருக்கடிகளையும் கடந்து வாழவேண்டும் என்ற உயிர்த்துடிப்புடன் இனக்குழுக்கள் இயங்குகின்றன. இனக்குழுக்கள் நகரங்களை நோக்கிப் பெயர்வது அதிகரித்து வருகிறது. இனக்குழுக்களிடையே பரிவு, மனிதநேயம், சடங்கு சார்ந்த பரிமாற்றங்கள், குலச்சாமிகள் சார்ந்த பல இணைவுகளையும் பார்க்கமுடிகிறது. நாவல்கள் இவற்றைப் பதிவு செய்யவில்லை. முரண்களை மட்டுமே சம்பவங்களாகக் காட்டியுள்ளன. சிலர் இதைப் பதிவு செய்துள்ளனர். இனக்குழுக்களிடையை காணப்படும் பகையைத் தாண்டி துளிர்க்கும் காதல் சம்பவங்களை இளைஞர்கள் வரவேற்பதும் பெரியவர்கள் எதிர்ப்பதும் காணமுடிகிறது. எல்லா இனக்குழுக்களிடையேயும் அகமணமுறை தீவிரமாகப் பின்பற்றப்படுகிறது. ஒடுக்கப்பட்ட ஒத்த இனக்குழுக்களிடம் இது ஓரளவிற்கு நெகிழ்ச்சித் தன்மையடைந்திருக்கிறது. ஒடுக்குமுறையை மீறி நிற்கும் காதல் எல்லா இனக்குழுக்களிலும்

காணப்படுகிறது. இக்கருத்தியல்களைப் பல நாவல்கள் கதைச் சம்பவங்களாக்கியிருப்பது நவீன இலக்கியத்தின் சாதனை.

ஒடுக்கப்பட்ட இனக்குழுக்களிடையே நடந்த மதமாற்றம் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளதாரம் போன்றவற்றில் முன்னகர வழிவகுத்திருந்தாலும் சம அங்கீகாரத்தைத் தரவில்லை.அங்கும் ஏற்றத்தாழ்வு தொடர் கதையாகிறது. கதைகளில் இந்தக் குரல்கள் (கருக்கு, கருப்பாயி என்ற நூர்ஜகான்) ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.




தென்மாவட்டங்கள்



மதுரை மாவட்டம்



மேற்குத் தொடர்ச்சி மலை

ஆய்வுத் தலைப்பு : "தமிழ் நாவல்களில் இனக்குழுக்களின் அடையாளச் சிக்கல்களும் மனித உரிமைகளும் - கள ஆய்வாகத் தென் மாவட்டங்களை முன்வைத்து" என அமைந்தள்ளது.

ஆய்வுப் பொருள் :

தென் தமிழ் நாட்டில் வாழும் இனக்குழுக்களைப் பலவாறாகப் பிரிக்கமுடியும். அவ்வினக்குழுக்களை இலக்கியம் விவரிப்பாக வரையும்போது அதன் சிறப்புகள், விடுபடல்கள், பிறழ்வுகள் உற்றுநோக்கி ஆய்வு செய்வது ஆய்வுப் பொருண்மையாக இருக்கிறது. இரண்டாயிரத்திற்குப் பின்பு இனக்குழுநாவல்கள் தமிழில் அதிகமாக வருகின்றன. இவ்வினக்குழுக்களின் அடையாளச் சிக்கல்கள், மனித உரிமைகள் நாவல்களில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை இனக்குழுக்களின் வாழ்விடங்களுக்குச் சென்று கலந்துரையாடித் தரவுகளை நாவல்களோடு ஒப்பிட்டு, முடிவுகளை அறிவது முதன்மையானது. இனக்குழுக்களை ஆய்வு செய்ய மானிடவியலின் ஒரு பகுதியாக அறியப்படும் இனவரைவியல் ஆய்வுகள் உலகம் முழுவதும் பெருமதிப்பு பெற்று வருகின்றன. இனக்குழுக்களிடையே பின்பற்றப்பட்டு வந்த தாவர வழக்காறுகள், உணவு வழக்காறுகள், வட்டார மொழிப் பயன்பாடுகள் மற்றும் நாட்டார் சமய மரபுகளைக் கவனப்படுத்துவது, தனித்துவமானது.

ஆய்வு அணுகுமுறை

தென்மாவட்ட இனக்குழுக்களைப் பற்றிய புனைவுகளை விரிவாக ஆய்வு செய்துவிட்டு அவற்றில் இடம்பெறும் முக்கிய வரலாற்றுப் போக்குகளை, அடையாள நெருக்கடிகளைப் பின்பற்றி அவற்றைப் பிற நூல்கள், ஆவணங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் ஒப்பீட்டு ஆய்வும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதால் விளக்கமுறை ஆய்வும் பின்பற்றப்பட்டுள்ளன. மானிடவியலின் பின்புலத்தில் இனக்குழுக்களின் சமூகப் பண்பாட்டுக் கூறுகளைக் கவனப்படுத்தும் போது இனவரைவியல் முதன்மையான அணுகுமுறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. மானிடவியல் அறிஞர் கே.என்.சிங். வட்டாரநாவல்கள் யாவும் இனவரைவியல் தொகுதி பெறுகின்றன என்பர். தென்தமிழகத்தின் வட்டாரங்களை நாவல்கள் பதிவு செய்துள்ளன. தென்தமிழகத்தின் வரலாற்றுச் சம்பவங்களைத் தொகுத்திருப்பதால் வரலாற்று இனவரைவியல் இவ்வாய்வேட்டில் செயல்பட்டிருக்கிறது.

முதன்மைத் தரவுகள்

மலைவாழ் மக்கள் குறித்த லஷ்மி சரவணக்குமாரின் கானகன், சு.வேணுகோபாலின் வலசை, எஸ்.செந்தில்குமாரின் கழுதைப்பாதை, டி.செல்வராஜின் தேநீர், டேனியலின் எரியும் பனிக்காடு போன்றவையும் காடு மற்றும் வேளாண் சார்ந்த இனக்குழுக்கள் குறித்த கி.ராஜநாராயணனின் கோபல்லகிராமம், பூமணியின் வெக்கை, அஞ்ஞாடி, ஜெயமோகனின் ரப்பர், காடு, ஊமைச்செந்நாய், சோ.தர்மனின் தூர்வை, கூகை, சூல், பாமாவின் கருக்கு,சங்கதி, ராஜ்கவுதமனின் சிலுவைராஜ் சரித்திரம், சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள், ஏக்நாத்தின் கெடைகாடு போன்றவையும் வறண்ட நிலங்களைப் பின்புலமாகக் கொண்ட இனத்தொகுதிகள் குறித்த கோணங்கியின் கதைகள், ச.தமிழ்ச்செல்வனின் கதைகள், எஸ்.ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி, மு.ராஜேந்திரனின் வடகரை, 1801, வேல.ராமமூரத்தியின் குற்றப்பரம்பரை, வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம்,கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர் போன்றவையும் போதி சத்துவ மைத்ரேயாவின் சிப்பியின் வயிற்றில் முத்து, இராஜம் கிருஸ்ணனின் அலைவாய்கரையிலே, பொன்னீலனின் தேடல், வண்ணநிலவனின் கடல்புரத்தில், ஸ்ரீதர கணேசனின் வாங்கல், தோப்பில்முகமது மீரானின் ஒரு கடலோரக்கிராமத்தின் கதை, ஜோ.டி.குரூஸின் ஆழிசூழ் உலகு, கிறிஸ்டோபர் ஆண்றனியின் துறைவன் போன்றவையும் நகரங்களில் தொழிற்படும் இனத்தொகுதிகள் பற்றிய பாண்டிக்கண்ணனின் சலவான், மழைப்பறை, அறிவழகனின் கழிசடை, மாற்குவின் யாத்திரை, பிச்சைக்காரர்கள் குறித்த ஜெயமோகனின் ஏழாம் உலகம், கள்ளர்கள் குறித்த சு.வெங்கடேசனின் காவல்கோட்டம் ஆகிய நாவல்கள் முதன்மை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

துணைமைத் தரவுகள்

மேற்கண்ட தென்னகப் படைப்பாளிகளின் இனவரைவியல் பார்வையில் அமைந்த சிறுகதைகள், பக்தவத்சல பாரதி, ஆர். செல்லப்பெருமாள், சி.மகேஸ்வரன் போன்ற மானிடவியல் ஆய்வாளர்கள் எழுதிய மானிடவியல் நூல்கள், தென்தமிழ் நாட்டின் பண்பாட்டாய்வாளர்களாக அறியப்படும் நா.வானமாமலை, தொ.பரமசிவன், ஆ.சிவசுப்ரமணியன், அ.கா.பெருமாள், இ.முத்தையா, டி.தருமராஜ் போன்றவர்களின் ஆய்வுகள், பல்வேறு சாதிகள் குறித்து வந்துள்ள இனவரைவியல் நூல்கள், தமிழர் இனத்தொகுதிகள் குறித்து ஆய்வு செய்த ஆங்கில ஆய்வாளர்களான எட்கர் தர்ஸ்டன், அபுதுபே, லூயி டுமோ, கால்டுவெல், ஸ்டுவர்ட் பிளாக்பன் ஆகியோரின் நூல்கள், களத்தரவுகள், ஆவணங்கள், தொல்லியல் சார்ந்த தரவுகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், இணையதளங்கள், இனக்குழுக்கள் குறித்த ஆவணப்படங்கள் (ரேகை,பீ,) போன்றவை துணைமை ஆதாரங்களாக இருக்கின்றன.

ஆய்வுக் களமும் ஆய்வு செய்த விவரமும்

இந்தியாவின் தென் கோடியில் மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரங்களில் அமைந்திருக்கும் தென்மாவட்டங்களான மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள இனக்குழுக்கள் பன்மைச் சமூகங்களாகவும் தனித்த இனத்தொகுதிகளாகவும் இயக்கம் கொள்கின்றன. இச்சமூகங்களின் அசைவாக்கங்கள் குறித்த புனைகதைகள் ஆய்வின் முக்கியக் களமாகக் கொள்ளப்பட்டுள்ளன. கதைகள் நடக்கும் ஊர்களில் உள்ள பொது அமைவிடங்கள், தனித்துவ அடையாளங்கள் பெற்ற கிராமங்கள்,

தென்னகத்தில் காணப்படும் முக்கிய கல்வெட்டுகள், பாறை ஓவியங்கள், குடவரைகள், நடுகற்கள், கோவில்கள், ஓலைச்சுவடிகள் கிடைக்கும் ஜமீன்கள், நூலகங்கள், ஆவணக்காப்பகங்கள், வரலாற்றில் இடம் பெற்ற ஊர்கள், கடற்கரைகள், மலைப்பிரதேசங்கள், காடுகள், நகரங்கள் எனப் பரந்து விரிந்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு சுற்றுகள் சென்று தரவுகள் சேகரிப்பது என முடிவு செய்து கொண்டோம். பின்பு மதுரையைப் பிரதானமாகக் கொண்டு தென்னகத்தின் இனக்குழுக்களின் பண்பாட்டு வரைவியலை ஆய்வு செய்வது எனத்திட்டமிடப்பட்டது. ஏனென்றால் மதுரை தென்னகத்தின் பண்பாட்டுத் தலைநகரம் மட்டுமல்ல தென்னகத்தின் நுழைவுவாயிலும் கூட. அதனால் பெரும்பாலான இனக்குழுக்கள் மதுரை வட்டாரத்திலே இருக்கின்றனர். களப்பணிகளை சரிபார்க்க, உறுதிப்படுத்த மேலும் தகவல்களைப் பெறுவதற்கு மதுரை வட்டாரத்தைப் பெருவாரியாகப் பயன்படுத்தும் தேவை இருப்பதை உணர்ந்து கொண்டு செயல்பட்டோம்.

**<u>தென்மாவட்ட இனக்குழுக்களின் வாழ்வியல் நிலைக்களன்கள்</u>**



வீரபாண்டி – தேனி



மீன்குஞ்சுகள் விடும் சடங்கு – மதுரை



கழுதைப் பால் விற்பவர் - விருதுநகர்



குலசாமி வழிபாடு - இராமநாதபுரம்



ஆடித் திருவிழா – மதுரை



நரிக்குறவர்கள் - நெல்லை



ஆண்கள் மட்டும் பங்கேற்கும் முத்தையா கோவில் உணவுத் திருவிழா - மதுரை



மீன் பிடித்தல் – மாடக்குளம்



பஞ்சாயத்து – திருமங்கலம்



புரவி எடுப்பு சடங்கு - மதுரை



கதிர் அறுப்பு திருவிழா – தேனி



சல்லிக்கட்டு – சிவகங்கை



பெட்டி எடுப்பு - உசிலம்பட்டி

டிசம்பர் 2015 முதல் மார்ச்சு 2017வரை செய்யப்பட்ட ஆய்வுப் பணிகள் :

பல்கலைக்கழக நிதி நல்கை டிசம்பர் 2015இல் கிடைக்கப்பெற்றவுடன் ஆய்வுத்திட்ட உதவியாளரைத் தேர்ந்தெடுக்கும் பணி தொடங்கியது. ஆய்வுத்திட்டம் குறித்து இருபதிற்கும் மேற்பட்ட கல்லூரிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பி விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 04.01.2016 அன்று பேராய்வுத் திட்டத்திற்கான நேர்காணல் நடைபெற்றது. ஏழுபேர் கலந்து கொண்டனர். முதல்வர், துறைத்தலைவர், பேராய்வுத் திட்ட முதன்மையர், புறத் தேர்வாளராக மேலூர் அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் ப. சிங்காரவேலன் ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் நடந்த நேர்காணலில் தகுதியின் அடிப்படையில் திரு. க. சிவக்குமார் எம்.ஏ., எம்ஃபில், தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றே பணி ஆணை வழங்கப்பட்டு 06.01.2016 அன்று ஆய்வுத் திட்ட உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

நூல்கள் வாங்குவது, ஆய்விற்குத் தேவையான கருவிகள் வாங்குவது, கள ஆய்விற்குச் செல்வது எனப் பணிகள் விரைந்து தொடங்கின. தேனி மாவட்டப் பளியர்களை குரங்கணியிலும் (17.01.16), காலனியப் படுகொலைகள் நடந்த குற்றப்பழங்குடிகளை பெருங்காமநல்லூரிலும் (21.01.16), தொல்லியல் ஆதாரங்களைக் கீழடியிலும் (03.02.16)ரேகைச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கீழக்குயில்குடி சென்று ஆய்வு நடத்தப்பட்டது.

திருமங்கலம் வடமலைக்குறிச்சியில் உள்ள குறவர்களையும் (27.02.16) உசிலைப்புத்தூர் இனக்குழுக்களைச் (28.02.16) சந்தித்து மழைப்பறை, காவல்கோட்டம், கானகன் நாவல்களின் களங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அழகர்மலை பிராமி கல்வெட்டுக்களை (16.04.16) வாசிக்கவும், பாண்டிக் கண்ணன் நாவல்களைப் பின்பற்றி மேலக்கோட்டை (22.04.16) விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் (18.5.16) வாழ், குறவர்களையும் சந்தித்துத் தகவல்கள் பெறப்பட்டன. கானகன் நாவலைப் பின்பற்றி 29.05.16அன்று தேனி மாவட்டத்தில் உள்ள சுருளிமலை பழங்குடிகளைச் சந்தித்துத் தகவல்கள் பெற்றோம். 02.06.16அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முத்துவயல் திருவிழாவில் பூர்வீகக் குடிகளையும் தனுஷ்கோடியில் மீனவர்களையும் சந்தித்து ஆழிசூழ் உலகு பின்புலச் சம்பவங்கள் சரிபார்க்கப்பட்டன.

10.11,06.16 ஆகியதேதிகளில் சென்னை ஆவணக்காப்பகங்கள், ரோஜா முத்தையா மன்றம், அண்ணா நூல் நிலையம், புத்தகக் கண்காட்சி என ஆய்வுத் தொடர்பான பணிகள் செய்யப்பட்டன. கீழடி, கீழக்குயில்குடி சென்று கிடைத்த தரவுகளைத் தகவலாளிகளிடம் கேட்டு உறுதி செய்யப்பட்டன. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் செண்பகனூர் ஆவணக்காப்பகம் (24,25,26,27.11.16) மற்றும் பெருமாள் மலை வாழ் இனக்குழுக்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கிடைத்த தகவல்களை ஒளிப்படம் எடுப்பது, கல்வெட்டுக்களை வாசிப்பது, சுவடிகளை வல்லுநர்களிடம் கொடுத்து வாசிப்பது எனப் பல பணிகள் நடந்தன.

07.02.17 அன்று டெல்லியில் நடந்த இடைக்கால நேர்காணலில் கலந்து கொண்டு அறிக்கை சமர்ப்பித்தேன். அடுத்து செய்ய வேண்டிய பணிகள் மேலும் தொடர ஆவன செய்ய வேண்டுகோள் வைக்கப்பட்டது. 25.02.17 உசிலம்பட்டி புத்தூர் குடவரையைத் தொல்லியல் ஆய்வாளர் காந்தி ராஜனோடு சென்று ஆராய்ந்தோம். தென்தமிழ்நாடு குறித்த நாவல்கள், படைப்பாளிகள் பட்டியல் போடப்பட்டு பல்வேறு ஆவணங்களின் பின்புலங்களில் வாசிக்கவும் ஆய்வு செய்யவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பேராசிரியர்கள் இ.முத்தையா, ஆ.சிவசுப்ரமணியன், டி.தருமராஜ், பா. ஆனந்தகுமார், எழுத்தாளர்கள் கோணங்கி, சு.வேணுகோபால், ச.தமிழ்ச்செல்வன், ஆர்.செல்லப்பெருமாள், பக்தவத்சலபாரதி போன்றோருடன் ஆய்வு தெடர்பாக இந்தக் காலகட்டங்களில் உரையாடினேன். ஆக இந்தப்

பதினைந்து மாதங்களில் களஆய்வு, தகவல்களை நிரல்படுத்துதல், முப்பதற்கும் மேற்பட்ட நாவல்களை வாசித்துப் பகுப்பாய்வு செய்தல், தேர்ந்தெடுத்த சிறுகதைகளைப் பகுத்துக் கொள்தல், தரவுகளும் நாவல் சம்பவங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. படைப்பாளிகளுடன் உரையாடல் செய்து தெளிதல் என ஆய்வு முன்னகர்ந்தது.

<u>பழங்குடிகளின் வாழ்வியல்</u>


மீனவருடன் – இராமேஸ்வரம்


கூடை முடைபவர்கள் – விருதுநகர்


பளியர் - சிறுமலை


கீதாரி – வத்தலக்குண்டு


நாழி மணிக்காரர் – திண்டுக்கல்


பகல் வேசக்காரர் - சங்கரன்கோவில்


முதுவர் – குரங்கனி


விவசாயி – விருவீடு


பச்சை குத்துபவர்- கோவில்பட்டி

ஏப்ரல் 2017 முதல்  ஜுன் 2018 வரை செய்யப்பட்ட ஆய்வுப் பணிகள்

தேனி வாழ் பழங்குடிகள் குறித்து ஆய்வு செய்ய மேகமலை, ஆடி அமாவாசைத் திருவிழா நடைபெறும் விருதுநகர் சதுரகிரி, அகதிகளின் முகாமான தோப்பூர், செட்டில்மெண்ட் நடந்த பர்மா காலனி, தனக்கன்குளம் சென்று ஆய்வு செய்தோம். கரடிக்கல், கரடிப்பட்டி, போன்ற பகுதிகளில் கள்ளிக்காட்டு இதிகாசம் கதைவெளி குழுக்களை ஆராய்ந்தோம். விருதுநகர் மாவட்டம் கூமாபட்டி பகுதிகளில் வாழும் அருந்ததியர்கள் வாழ்வினைச் சூரனைத்தேடும் ஊர் நாவலைப் பின்புலமாகக்கொண்டு தகவல்களைத் திரட்டினோம். ஆங்கிலேயர் காலத்துப் பள்ளிகளை சொரிக்காம்பட்டி, உரப்பனூர், காண்டை, வாகைக்குளம் பகுதிகளில் ஆராய்ந்தோம். சிறுமலைப் பளியர்களைச் சந்தித்து அவர்களின் வாழ்வாதாரங்கள் குறித்து உரையாடினோம்.



தொழிலாளி - உரப்பனூர்



கல் வீடு – மதுரை



காளை வளர்க்கும் பெண் - காரைக்குடி



சித்தர் – கிண்ணிமங்கலம்



அருந்ததியர் நடுகற்கள் – விருதுநகர்



தசரா திருவிழா - தூத்துக்குடி



யாசகர்கள் – சிவகங்கை



பக்கிர்ஷா – தூத்துக்குடி



வேசக்காரர் - தேனி

ஆழி சூழ்உலகு நாவல் கதையைப் பின்பற்றி இராமநாதபுரம் மீனவர்களையும் அலைவாய்கரையிலேயே நாவலைப் பின்பற்றி தூத்துக்குடி வாழ் பரதவர்களையும் குற்றப்பரம்பரை நாவலைப் பின்பற்றிப் பெருநாழி கிராம மக்களையும் சந்தித்து உரையாடித் தகவல்களைப் பெற்றோம். முதலைக்குளம், மேட்டுப்பெட்டி கல்வெட்டுக்களையும், ஓந்திமலை ஒட்டர்கள் வாழ்வியலையும் வடபழஞ்சி வாழ் இடையர்களையும் விக்கிரமங்கலம் சிவன் கோவிலிற்கும் இனக்குழுக்களுக்கும் உள்ள உறவுகளைத் திரட்டினோம். குரங்கனி முதுவான்களை வலசை நாவல் கொண்டும் ஆங்கிலேயர் கால குள்ளப்பன்பட்டி செட்டில்மெண்ட்களை வைரமுத்து நாவல் கொண்டும் காளையார் கோவில் மருது சகோதரர்கள் தூக்கில் இடப்பட்ட இடங்களை 1801 நாவல் பின்னணியிலும், சிவகங்கை வட்டார கோவில் பிச்சைக்காரர்களை ஏழாம் உலகம் நாவல் பின்னணியிலும் ஆய்வு செய்தோம். தொட்டப்பநாயக்கனூர், உத்தப்பநாயக்கனுரர், நல்லுதேவன்பட்டி சென்று ஓலைச்சுவடிகளைக் கொண்டு கம்பளத்து நாயக்கர்கள் குறித்து ஆய்வு செய்தோம். போடிநாயக்கனூர் வட்டாரத்தில் நுண்வெளிக்கிரகணங்கள் நாவல் கொண்டு ஒக்கலிகர் வாழ்வியலையும், திண்டுக்கல் நத்தம் பகுதிகளில் குறவர்கள் பளியர்கள் வாழ்வியலை ஆய்வு செய்தோம். ஆஸ்டின்பட்டி அகதிகள் முகாம், கரடிக்கல் இனக்குழுக்கள் குறித்த நடுகல், கல்யாணிபட்டி,கிடாரிபட்டி பகுதிகளில் காணப்படும் பாறை ஓவியங்களை உற்றுநோக்கினோம். பெருங்காமநல்லூர் காலனியத் துப்பாக்கிச்சூடு நடைபெற்ற இடங்களில் உள்ள நடுகற்களை ஆராய்ந்தோம். சி.சு.செல்லப்பாவின் குற்றப்பரம்பரை கதைப் பின்புலத்தில் கள்ளர்மடம் சென்றோம். தொல்லியல் நகரமான கீழடி, கொடைக்கானல் ஆவணக்காப்பகம் சென்று தென்தமிழ்நாட்டு இனக்குழுக்கள் குறித்தசெய்திகளை ஆராய்ந்தோம். ரப்பர், காடு, தேடல் ஆகிய நாவல்களைப் பின்பற்றி நாகர்கோவில் வட்டாரங்களுக்குப் பயணித்தோம். மண்டைக்காடு, முட்டம், கடல்வாழ் மீனவர்களையும் விஷ்ணுபுரம் நாவல் களமான பத்மநாதபுரம் விஷ்ணு ஆலயத்திற்கும் சென்று தகவல்களைப் பெற்றோம். பல்வேறுபட்ட இனக்குழுக்கள், அதிகமான எழுத்தாளர்கள், விரிந்த ஆய்வுக் களம் என்பதால் ஆய்வு நிறைவு செய்யும் பணி நீண்டது.

களத்தகவல்களையும் இலக்கியத்தகவல்களையும் ஒருங்கே வைத்து அணுக்கமானவற்றையும் விலகல்களையும் தொகுக்கும் பணி தொடங்கியது. அதில் ஏற்பட்ட சிக்கல்களைப் பேராசிரியர்கள் தி.சு.நடராசன், ந.முத்துமோகன், ஓ.முத்தையா, சுந்தர்காளி, எழுத்தாளர்கள் அர்ஷியா, பாண்டிக்கண்ணன், சமயவேல், ந.முருகேசபாண்டியன், ச.முருகபூபதி போன்றவர்களுடன் உரையாடி ஆய்வை செப்பனிடத் தொடங்கினோம். ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் எங்களின் திட்டத்தை செழுமையாக்கினர். அவர்களின் வழிகாட்டுதல் வாயிலாக இத்திட்டம் முழுமையாக நிறைவேறி இருக்கிறது. இவ்வாய்விற்கு ஒதுக்கப்பட்ட கால அளவும் நிதியுதவியும் உரிய வகையில் கிடைக்கப் பெற்றமையால் இவ்வாய்வு முழுமை எய்தியுள்ளது.

<u>பேராசியர்கள் மற்றும் எழுத்தாளர்களுடன் உரையாடிய போது</u>




**பேரா. ஆர்.செல்லப்பெருமாள்**



**தொல்லியல் அறிஞர் – சோ.சாந்தலிங்கம்**



**பேரா.இ. முத்தையா**



எழுத்தாளர் கோணங்கி



பேரா. சுந்தர்காளி



கதைசொல்லி முருகபூபதி



பேரா. ஸ்டாலின் ராஜங்கம்



எழுத்தாளர் தேவதாஸ்



ஆய்வாளர் காந்திராஜன்



காலனியச் சிறை – உத்தப்பநாயக்கனூர்



ஓலைச்சுவடி ஆய்வு – நல்லுதேவன்பட்டி



எழுத்தாளர் சு.வேணுகோபால்

ஆய்வு முடிவுகள்

ஒரு நூற்றாண்டைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கும் தமிழின் நவீன இலக்கியம் அதன் தனித்த வகைமைகளான சிறுகதை, நாவல் போன்றவற்றால் செழுமை பெற்றுத் திகழ்கிறது. பாண்டித்ய எழுத்து நடையில் ஆக்கம் பெற்ற கதைகள் கால நகர்வில் குழு மொழிகளால் வட்டாரத்தில் வாழும் குடிகளின் வாழ்வியலைப் பதிவு செய்து பயணிக்கத் தொடங்கின. சி.சு.செல்லப்பா வத்தலக்குண்டு வட்டாரத்தையும், ஆர். சண்முகசுந்தரம் கொங்கு வட்டாரத்தையும் தி. ஜானகிராமன் தஞ்சை வட்டாரத்தையும், ஜெயகாந்தன் சென்னை வட்டாரத்தையும் பதிவு செய்து, நடுத்தர வர்க்கம் சார்ந்த எழுத்தின் பொதுப்போக்கிலிருந்து விலகி வட்டார வாழ்வியலைத் தொடங்கி வைத்தனர். அது தொண்ணூறுகளில் தலித் இலக்கியங்களின்

வருகையால் கூர்மைப்படுத்தப்பட்டது. பூமணி, இமையம், பாமா, சிவகாமி ஆகியோரால் வட்டாரக் கதைகளின் மைய எடுத்துரைப்பாக இனவியல் மாறின. இப்போக்கோடு தமிழ்ச் சூழலில் தோன்றிய வேர்களைத் தேடிய பின் காலனியமும் இனத் தொகுதிகளை தொகுக்க முற்பட்ட மானிடவியலின் வளர்ச்சியும் பல்வேறு இனக்குழுக்களைத் தங்களின் இனம், வட்டாரம் சார்ந்த் வாழ்வியலை நாவல்களாக படைக்கத் தூண்டின. இரண்டாயிரத்திற்குப் பின்பு இனக்குழுசார்ந்த நாவல்கள் தமிழில் அதிகம் வரத் தொடங்க தலித்தியம், பின்காலனியம், மானிடவியல் பெருக்கம் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன.

'**இனக்குழுக்கள் - அடையாள அரசியல் -மனித உரிமைகள்**' எனும் முதல் இயல் தமிழர்களின் சங்க கால இனக்குழுக்களின் பண்பாட்டு மரபுகளைத் தொகுத்துக் கொண்டுள்ளது. திணைக்குடிகள், உமணக்குடிகள், பாண்குடிகள், ஆறலைக்கள்வர் கூட்டங்கள், இசை நாடோடிகள், மலைக்குடிகள், செம்படவர் கூட்டங்கள், ஆயர்குடிகள், வணிகத் தொகுதிகள் போன்றோரின் கூட்டுவாழ்வு, சமயமரபுகள், நிகழ்த்துக்கலைகள், பாதீடுமுறைகள், உணவுப்பண்பாடு, தொழில்சார் வெளிகள் என இனக்குழுக்களின் அசைவியக்கத்தைப் பாட்டும் தொகையும் கொண்டு இவ்வியலின் முதல் பகுதி விளக்கியுள்ளது. இனக்குழுவின் புவிச்சூழல், பண்பாட்டுமயமாகும் காரணிகள், குழுவாழ்வுப் பகுப்புமுறைகள், நாட்டார் வழக்காறுகள், வட்டார அரசியல்முறைகள், கூட்டு உளவியல், குழு உற்பத்தி முறைகள் என நவீன இனவரைவியலின் அடிப்படைகள் இரண்டாவது பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இனக்குழுக்களின் அடையாள அரசியல் கவனப்படுத்தப்பட்டுள்ளன. ஐ.நா. முன்வைத்த மனித உரிமைகளின் அடிப்படைகள், அதன் வரலாறு, முக்கியப் பிரகடனங்கள், குழுக்களின் உரிமைகள் மூன்றாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. பின்வரும் இயல்களுக்கு இவ்வியல் களம் அமைத்துக்கொடுக்க தென் தமிழகத்தின் அமைப்பு, மக்கள்தொகை, பொருளாதார மண்டலங்கள் காட்டப்பட்டுள்ளன. .

'**மலைவாழ் மக்களின் அடையாள நெருக்கடிகளும் மனித உரிமைகளும்**' எனும் இரண்டாவது இயலில் தென்தமிழ்நாட்டில் வாழும் மலைவாழ்ப் பழங்குடிகளான பளியர்கள், முதுவான்கள், மூப்பர்கள் ஆகிய இனக்குழுக்களின் வாழ்வியலைப் பேசும் லஷ்மி சரவணக்குமாரின் கானகன், சு.வேணுகோபாலின் வலசை, எஸ் செந்தில்குமாரின் கழுதைப்பாதை ஆகிய நாவல்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. மூன்றுமே களத்தகவல்களைத் திரட்டி எழுதப்பட்டுள்ளன. திண்டுக்கல், கொடைக்கானல், பழனி, போடி, திருவில்லிபுத்தூரில் வாழும் இப்பழங்குடிகளின் நிலங்கள் தோட்டப்பயிர்களுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இயற்கையோடு இணைந்த வாழ்விலிருந்து வெளியேற்றப்பட்டு நிலத்திற்குச் செல்லத் தூண்டப்படுகின்றனர். தேனெடுத்தல், வேட்டையாடுதல், கூடைமுடைதல், பாறைகளில் பாசங்களைச் சேகரித்தல் போன்ற தொழில்சார்நிலைகள் மாற்றத்திற்குள்ளாகி வருகின்றன. முதுவாக்குடிகள் போடி, கம்பம் மெட்டு, குரங்கணி ஆகிய பகுதிகளிலிருந்து கேரளப் பகுதிகளுக்குப் பெயர்ந்து செல்கின்றனர். சிறுமலை வாழ் பளியர் வீட்டுப் இளம் பெண்கள் நிலம் சார் குடிகளான மாடுமேய்ப்பவர்களால் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுவதைக் களஆய்வில் அறிந்து கொள்ள முடிந்தது. புனைகதைகள் மலைக்குடிகளின் புவிவரைவியலை, வாழ்க்கை வழிபாட்டுச் சடங்குகளை, வேட்டைச் சாகசங்களை, தேனெடுக்கும் முறைகளைச் சொல்லிச் சென்றுள்ளன. செம்மூதாய் பழங்குடிகளை மொத்தப்படுத்திப் பேசியுள்ளது. காட்டு விலங்குகளை விட நாட்டு மனிதர்களின் உழைப்புச் சுரண்டல், குறைந்த கூலி போன்ற சிக்கல்களை நாவல்கள் பதிவு செய்துள்ளன. மரபுசார்ந்த வாழ்க்கையைச் சிறிதுசிறிதாக இழந்து வருகின்றனர். இக்குடிகளைச் சாராத படைப்பாளிகள் என்பதால் பழங்குடிகளின் மொழி படைப்பாளிகள் முழுமையாகக் கைகூடவில்லை. இக்குடிகளின் தனித்த மொழிவழக்காறு நாவல்களில் இடம்பெறவில்லை. ஒப்பந்தக்கூலிகளாக மூணாறு, வால்பாறை தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்ற நெல்லை, தேனி வட்டார

அடித்தளமக்களின் பாடுகளையும் வாதைகளையும் அவர்களின் மீதான மனித உரிமை மீறல்களையும் தேநீர், எரியும் பனிக்காடு ஆகிய நாவல்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப் புனைகதைகளில் '**காடுசார்ந்து வாழும் இனக்குழுக்களின் அடையாளங்களையும் மனித உரிமைகளையும்**' எனும் மூன்றாம் இயல் கவனப்படுத்தியுள்ளது. தென்தமிழகத்தில் காணப்படும் நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் முக்கிய புவிசார்மண்டலங்களாகும். மருத நிலங்களான வேளாண் நிலங்கள், புஞ்சை நிலங்களான கரிசல் காடுகள், செங்காடுகள் எனக் காடு சார்ந்து வாழும் பல்வேறு குடிகளையும் கொண்டு அமைந்துள்ளது தென்னகம். தெலுங்கு பேசும் கம்மவர்கள் குறித்த கி.ராவின் கோபல்லகிராமம், கன்னடம் பேசும் காப்பிலிகள் குறித்த சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள், வேளாண்குடிகள் பற்றிய பூமணியின் அஞ்ஞாடி, வெக்கை, சோ.தர்மனின் தூர்வை, கூகை, ஆதிதிராவிடர்கள் பற்றிய பாமாவின் கருக்கு, ராஜ்கவுதமனின் சிலுவைராஜ்சரித்திரம், கீதாரிகள் குறித்த ஏக்நாத்தின் கெடைகாடு, மலைக்காடுகளில் வாழும் முதுகுடிகள் குறித்த ஜெயமோகனின் காடு, ஊமைச்செந்நாய் போன்ற நாவல்கள் இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. வேளாண் நிலங்களுக்கான நீர்வடிகால்களின் ஆக்ரமிப்பு, கண்மாய்கள் அழிப்பு, செயற்கை உரங்களால் நிலம் மாசுபாடு, போதிய விலைகிடைக்காத நிலை இவை வேளாண் குடிகளின் அடையாளச் சிக்கல்களாக இருக்கின்றன. புஞ்சைக் காடுகளை வாழ்விடங்களாகக் கொண்ட குடிகள் மழைமறைவுப் பிரதேசங்களாக மாறிவருகின்றன அல்லது கடும் மழைப்பொழிவால் வேளாண்மை பாதிக்கப்படுதல், நிலத்தடி நீர் குறைதல், கந்துவட்டி கொடுமைகள், கிணறு, ஏரி, குளம் வறண்டுபோதல், போர்போட்டும் விவசாயம் செய்யமுடியாத நிலை முக்கியமானதாக இருக்கிறது. ரியல் எஸ்டேட் தொழிலின் அசுர வளர்ச்சி,விலை கிடைக்காததால் உருவாகும் கடன் தொல்லைகள், வரதட்சிணை கொடுக்கமுடியாமல் திருமணமுறிவு எனப் பலநெருக்கடிகள் காணப்படுகின்றன.

அடித்தளமக்கள் நிலங்களை விட்டு வெளியேறுதல் அதிகரித்துள்ளன. பஞ்சாலைகள், பட்டாசுத்தொழிற்சாலைகள், தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிற்கூடங்களின் பெருக்கம் பாரம்பரிய வேளாண்குடிகளைக் கூலித் தொழிலாளிகளாக மாற்றுகின்றன. குழந்தைத்தொழிலாளிகளின் பெருக்கம் அவர்களின் மீதான மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைப்பாடுகள் கதைவெளிகளிலும் களத்திலும் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் பொருந்திப் போகின்றன. ஆடு, மாடுகளின் அழிவுகள்,பாரம்பரிய மீன்கள் நீர் நிலைகளில் இருந்து அகற்றப்பட்டு வளர்ப்பு மீன்கள் பெருகுதல், இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி நாய்கள் இனம் அழிதல் தொடங்கியுள்ளது. குருவிகள், மரங்கொத்திகள், செம்பூத்துகள், அரிவாள் மூக்கன் போன்ற பறவையினங்கள் அருகி வருகின்றன. வில்லிசைப் பாட்டு, கரகாட்டம், மேடைநாடகங்கள், கணியான்கூத்து போன்ற தென்னகத்திற்குரிய நிகழ்த்துக்கலைகள் அழிந்து வருகின்றன. அனைத்துப் படைப்பாளிகளுமே தங்களின் இனக்குழு வாழ்வை எழுதியிருப்பதால் மொழி, வழக்காறு, மாந்தர்களின் உடலியல் வருணனை, கதா சம்பவங்கள் அணுக்கமாக இருக்கின்றன. இனமோதல்களையும் கதைகள் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. தங்கள் இனக்குழுவின் மீதான சார்பு நிலைகளைச் சில இடங்களில் காணமுடிகிறது. பிற இனக்குழுபற்றிய பதிவுகளில் பின்னடைவுகளையும் பார்க்க முடிகிறது.

'**வறண்ட நிலம் சார்ந்த குடிகளின் அடையாளங்களும் உரிமைகளும்**' எனும் நான்காம் இயலில் தென்மாவட்டங்களில் உள்ள மழையற்ற பிரதேசங்களான பாலை நிலங்களை ஒத்த சாத்தூர், விருதுநகர், சிவகாசி, கமுதி, இராமநாதபுரம், உசிலம்பட்டி, கோவில்பட்டி, இராஜபாளையம் போன்ற பகுதிகளில் வாழும் பல்வேறு இனக்குழுக்கள் குறித்த கதைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தென்னகத்தின் முக்கிய நதிகளான வைகை, தாமிரபரணி பாசனத்திற்கு வெளியே வாழும் குடிகள் இவை. குற்றப்பழங்குடிகள் குறித்த கோணங்கியின் பாதரஸ

ஓநாய்களின் தனிமை, ச.தமிழ்செல்வனின் வாளின் தனிமை, எஸ்.ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி, வேலராமமூர்த்தியின் குற்றப்பரம்பரை, வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர், மு.இராஜேந்திரனின் 1801 போன்ற நாவல்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. காலனிய ரேகைச் சட்டம், பெரியார் அணைக்கட்டு ஏற்படுத்திய மாற்றங்கள், தென்னகத்தின் வறட்சி, தாதுவருடப் பஞ்சம், பாரம்பரிய காவல் முறை ஒழிப்பினால் குற்றங்கள் பெருகுதல், இனக்குழுக்களின் காலனியப் புலம்பெயர்வு, தென்னகத்தின் சுதந்திரப் போராட்டக் களங்கள் போன்ற வரலாற்றுச் சம்பவங்களால் பாலை நில இனக்குழுக்களின் அடையாளங்கள் சிதறடிக்கப்பட்டிருப்பதும் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதையும் இவ்வியல் காட்டியுள்ளது. ஒட்டர்கள், மணிக்குறவர்கள், உப்புக் குறவர்களின் வாழ்வியல்(தமிழ் ஒளியின் குற்றப்பரம்பரை) இன்றும் கேள்விக்குறியாகியிருப்பது, கவனப்படுத்தப்பட்டுள்ளது. படைப்பாளிகள், பாலை நிலமக்களின் தற்காலப் பிரச்சினைகளை விடக் கடந்த காலப் பிரச்சினைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். களஆய்வு செய்யும்போது காலனிய காலச் சம்பவங்கள் இளைய தலைமுறைக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. குற்றப்பழங்குடிகளின் இன்றைய வாழ்வியல் நிலை கதைகளில் இல்லை. இனக்குழுக்களுக்கிடையேயான முரண், விலகல், மோதல் போன்ற சமகால அரசியல் சில நாவல்களில் இல்லை என்பதை ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

**<u>ஆய்வுவெளிகள் – தென்தமிழ்நாடு</u>**


குமுளி மலைத்தொடர் - தேனி


சமணமலை – மதுரை


செங்காடு – போடி


வீரபாண்டி – தேனி


தனுஷ்கோடி – இராமநாதபுரம்


மீனவர் கிராமம் - கன்னியாகுமரி







மிட்டாய்க்காரர் - சாத்தூர்

நீத்தார் சடங்கு – உசிலம்பட்டி

விஷ்ணுஆலயம் - பத்மநாதபுரம்







தேவாலயம் – முட்டம்

பூம்பூம் மாட்டுக்காரர் – நெல்லை

நடுகல் - பெருங்காமநல்லூர்







பாறை ஓவியம் – பழனி

மேல் வைகை – மேட்டுப்பட்டி

தேயிலைக்காடுகள் - மேகமலை

**‘கடல்சார் புனைவுகளில் இனக்குழுக்களின் அடையாள நெருக்கடிகள்’** எனும்

| | |
|---|---|
| | ஐந்தாம் இயல் கடல் வாழ் பரதவர்களின் இனக்குழுவாழ்வியலை நாவல்கள் பதிவு செய்துள்ள விதங்களை ஆய்வு செய்துள்ளது. பரதவர், பெர்னாண்டோ, முக்குவர், நுழையர், செம்படவர் எனப் பல கிளைக்குழுக்களாக வாழ்கின்றனர். தென்மாவட்டம் நீண்ட கடற்கரையைக் கொண்டது. இராமேஸ்வரம், முட்டம், கன்னியாகுமரி கடல் வாழ் மீனவர்களிடம் கள ஆய்வு செய்யபட்டது. மீன் பிடித்தல், முத்துக் குளித்தல், சங்கறுத்தல், உப்பு விளைவித்தல், கருவாட்டு வியாபாரம் எனப் பல தொழிற் சார் நெருக்கடிகளுடன் வாழ்கின்றனர். இயந்திரப்படகுகளின் கபளீகரம், தரகு வியாபாரிகளின் பெருக்கம், சூழலியல் மாற்றங்கள், சுனாமி, புயல் போன்ற இயற்கை சீற்றங்கள் இவர்களின் வாழ்வைப் புரட்டிப் போட்டிருக்கிறது. சிப்பியின் வயிற்றில்முத்து, கடல்புரத்தில், அலைவாய்கரையிலே, ஆழிசூழ் உலகு, கொற்கை, தேடல், துறைவன் போன்ற நாவல்கள் விரிக்கும் களங்கள் பரதவர்களின் இனக்குழுவாழ்வியலை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. சுதந்தர இந்தியாவில் பரதவர்களின் கல்வி, பொருளாதாரத்தில் நடந்த முன்னேற்றங்கள் கவனப்படுத்தப்பட்டுள்ளன. அலைவாய்கரையிலே எதிர் கதையாடலைப் பேசியுள்ளது. ஸ்ரீதர கணேசன் இனக்குழு வேறுபாடுகளை வாங்கல் நாவலில் பதிவுசெய்கிறார். கடல்சார்ந்த இஸ்லாமியர் வாழ்வைத் தோப்பில் முகமது மீரான் பதிவு செய்துள்ளார். பழமைக்கும் புதுமைக்கும் நடக்கும் போராட்டம் தோப்பில் முகம்மது மீரான் நாவல்களின் மையம். வர்க்க வேறுபாடுகள், கல்வி கொண்டு வரும் மாற்றங்கள், பொருளாதார மாற்றங்கள், இனக்குழுவிற்குள் உருவாகும் ஏற்றத் தாழ்வுகள், உணவுப் பண்பாடுகளில் புதியன விழைவது, நவீன மாற்றங்களை எதிர்கொள்வதன் அவசியம், பெண்களின் தனிமை இனக்குழுவிற்குள் நடக்கும் ஊமைக்கலகங்கள் என அடையாளத்தேடல்களும் மனித நெருக்கடிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.<br><br>‘**நகரங்களில் வாழும் இனக்குழுக்களின் அடையாள நெருக்கடிகள்**’ எனும் ஆறாம் இயல் அருந்ததியர்கள், குறவர்கள், புலம் பெயர் அகதிகள், குற்றப்பழங்குடிகள், பகல் வேசக்காரர்கள், நாவிதர்கள், சலவைத் தொழிலாளிகள் போன்ற தொழில்சார் இனக்குழுக்களின் வாழ்வியல் நெருக்கடிகளை மையமாகக் கொண்ட கதைகளை ஆய்விற்கு எடுத்துக்கொண்டுள்ளது. பாண்டிக்கண்ணனின் சலவான், மழைப்பறை, அறிவழகனின் கழிசடை, ஜனகப்ரியாவின் சூரனைத்தேடும் ஊர், சு.வெங்கடேசனின் காவல்கோட்டம், போன்ற நாவல்களில் இனக்குழுக்கள் நகரம் என்பதன் இயக்கத்தின் ஒருபகுதியாகி துயர்படுகின்றனர். நகரங்களைச் சுத்தம் செய்யும் தோட்டிகளின் உழைப்பைச் சுரண்டுதல், பொருளாதாரச் சுரண்டல், பெண்களின் பாதுகாப்பற்றத்தன்மை ஆகியவற்றால் நகர வாழ்வியல் கிராமத்தை விட மோசமாக இருக்கிறது. நாடோடிகளை நகரம் பிற தொழில் செய்யத் தூண்டுகின்றது. பன்றி வளர்ப்பவர்களின் தொழில் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. குறவர்களின் முக்கிய பொருளாதார பலம் பன்றி வளர்ப்பதிலிருந்துதான் கிடைக்கிறது. நெகிழிப் பயன்பாட்டின் பெருக்கம் பாரம்பரியத் தொழிலை மாற்றியிருக்கிறது. நகரைச் சுத்தம் செய்யும் இனக்குழுக்கள் மீதான புறக்கணிப்பும் அவமானமும் மிகப் பெரும் மனித உரிமை மீறல். இது இயல்பாக நகர வீதிகளில் நடக்கின்றன. நகரைச் சுத்தம்செய்யும் தொழில் குழுமப் பெண்களின் பாதுகாப்பற்ற நிலைகளை பாண்டிக்கண்ணன் நாவல்கள் கவனப்படுத்தியுள்ளன. சலவைத்தொழிலாளர் (கோப்பம்மாள்), சமையல் தொழில் செய்பவர்கள் (மா.காமுத்துரையின் குதிப்பி), கொத்தனார் (மாயாண்டிக் கொத்தனின் ரசமட்டம்) போன்ற தொழில் சார் இனக்குழுமங்களைப் படைப்பாளிகள் கவனப்படுத்தியுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் குறித்த படைப்புகளில் பார்வையற்றவர்கள் குறித்த தேனி சீருடையானின் நிறங்களின் உலகம், அபிலாஸின் கால்கள் போன்றவற்றைச் சுட்டிக் காட்ட முடியும். தொழில் குழுமங்களிடையே பரவும் குடிக்கலாச்சாரம் பல பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதோடு, இரத்த உறவுகளுக்கிடையே பார துார விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. அச்சகம், தீப்பெட்டி தயாரிக்கும் கூடங்கள், பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளிகளின் நிலை துயரமானது. மேலாண்மை பொன்னுச்சாமி,(அரும்பு) |

| | |
|---|---|
| | ச.தமிழ்ச்செல்வன் (குரல்கள்), லட்சுமணப்பெருமாள், தனுஸ்கோடி ராமசாமி போன்றவர்களின் கதைகளில் குழந்தைகள், இளம்பெண்கள், முதியவர்கள் படும் பாடுகளையும் தொழில்சார் குழுக்களின் நெருக்கடிகளையும் காணமுடிகிறது. நகரத்து அடித்தள மக்களது வாழ்வின் சில பகுதிகள்தான் கதைகளாகியிருக்கின்றன, இன்னும் பதிவு செய்யப்படவேண்டியவை விரிவும் ஆழமும் மிக்கவை என்பதை களத்தகவல்கள் நமக்குக் காட்டுகின்றன. |
| 15 | Constribution to the Society(Give Details)<br>இந்தப் பேராய்வுத் திட்டமானது சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பின் விவரம்<br><br>இலக்கியத்தை முன்னெடுக்கும் சமூகமே பண்பாட்டிலும் முன்னகரும். தமிழ்ச் சமூகம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வருடங்களாக இலக்கியத்தை தனது முகமாக வைத்திருக்கிறது. தமிழ் இலக்கியத்தின் அறுபடாத தொடர்ச்சியை உலக மொழிகளில் காண்பது அரிது. அந்த அடிப்படையில் இரண்டாயிரத்திற்குப் பிறகான நாவல் இலக்கியத்தின் செழுமையை, வகைமைகளை மொத்தமாக அறிந்து கொள்ள இவ்வாய்வு உறுதுணையாக அமையும். தென்தமிழகம் குறித்து எழுதிய படைப்பாளிகளும் அவர்தம் படைப்புகளும் இந்த ஆய்வின் மூலம் தொகுக்கப்பட்டிருப்பது ஆய்வு உலகத்திற்குத் தேவையான ஒன்று. தென்தமிழகத்தின் புவிசார்மண்டலங்களான மலைகள், காடுகள், வேளாண்நிலங்கள், வறண்டநிலங்கள், கடல், நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றை இனவரைவியல் நாவல்களின் மூலம் திரட்ட முயற்சி மேற்கொண்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. இனக்குழுக்களின் வாழ்வியலை நிலவியல் தீர்மானிக்கிறது. இனக்குழுக்களின் இணைவுகளும் விலகல்களும் நிலத்தின் அடிப்படையிலே நடக்கிறது. இனக்குழுக்களின் நிலங்கள் தொகுக்கப்பட்டிருப்பது திணைமரபின் நீட்சியாகும். ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்தில் வாழ்பவர்களின் வேறுபாடுகளுக்கு இனக்குழுசார் புவிவரைவியலானது காரணமாக இருக்கிறது. அவற்றில் இவ்வாய்வு கவனம் செலுத்தியுள்ளது சமூகத்திற்கு உதவிகரமானது.<br><br>தென்தமிழ்நாட்டில் காணப்படும் இனக்குழுக்களின் பன்முக அடையாளங்களைக் கவனப்படுத்துவதோடு பிற இனக்குழுக்களை அங்கீகரிக்கும் சூழலை உருவாக்க, புரிந்துகொள்ள தமிழ்ச் சமூகத்திற்குப் பேருதவி செய்கிறது. பன்மைச் சமூகங்கள் ஒற்றுமையுடன் வாழ வழிவகுக்கும். பழக்கிண்ணத்தில் ஒவ்வொரு பழக்கீற்றும் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு தனது வேற்றுமையையும் தக்க வைத்துக்கொள்கிறது. ஒவ்வொரு இனக்குழுவும் தங்கள் பண்பாட்டிலிருந்து பிற பண்பாடுகள் வேறுபட்டு நிற்கும் தன்மைகளைப் புரிந்து கொண்டு இணைந்து நகரும் சூழல் பெருக இவ்வாய்வேடு துணை நிற்கும்.<br><br>‘இனவரைவியல் பொருண்மைகள் நிறைந்த பண்பாட்டுப் பனுவல்களாகவே வட்டார நாவல்கள் காணப்படுகின்றன’ என்பர் பக்தவத்சலபாரதி. அந்த அடிப்படையில் இவ்வாய்வேடு தென்தமிழகத்தில் காணப்படும் பல்வேறு குடிகளின் பன்முகப் பண்பாடுகளைப் பதிவு செய்துள்ளது. தென்னகத்தில் வாழும் இனக்குழுக்களின் குடிமையியல் பண்புகள், அடையாளங்காணப்பட்டிருப்பது பண்பாட்டு ஆய்விற்கு உதவியாக நிற்கும். பண்பாட்டின் மரபார்ந்த வடிவங்கள் அடுத்த காலகட்டத்திற்கு நகர்வதில் உள்ள சிக்கல்களையும் (குடுகுடுப்பைகாரர் பீட்சா சாப்பிடுவது) பார்ப்பது இன்றைய சமூகவியலிற்குத் தேவை. மானிடவியல் முன்வைக்கும் 1. முதன்மை நாகரிகம் 2. துணைமை நாகரிகம் 3. தனிமரபு 4 கூட்டுமரபு இந்த நான்கின் ஊடாட்டமாக இனக்குழு நாவல்கள் அமைந்துள்ளன. சமுதாயத்தின் பண்பாட்டு உருவாக்கங்களை இலக்கியங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை அறிவதற்கு இவ்வாய்வேடு பயனுள்ளதாக இருக்கும். பிறந்த குழந்தையின் வாயில் முதல் சேனைத்தொட்டு வைப்பது என்பது தமிழர் பண்பாடு. அதை இனக்குழுக்கள் தங்களின் நிலம், தொழில் வட்டாரத்திற்கு ஏற்ப செய்து வருகின்றனர். இதை நாவல்கள் பிரதிபலித்துள்ளன. பரதவர்கள் |

கடல்நீராலும் முதுவான்கள் தேனைத் தொட்டும் பனங்காட்டில் வாழ்பவர்கள் கருப்பட்டித் தண்ணீரைத் தொட்டும் நகரங்களில் வாழ்பவர்கள் சீனித் தண்ணீரையும் கொடுக்கின்றனர். பன்மை வாழ, நகர களம் சமைக்கின்றன இனவரைவியல் நாவல்கள்.



மருதநிலம் – மதுரை



உவரி – தூத்துக்குடி




பதிற்றுப்பத்தில் தென்பாண்டி நாடு



நடுகற்கள் – கரடிக்கல்



முதுகுடிகள் – வெள்ளைமலைபட்டி



மிட்டாய்க்கடை - தென்காசி



ஆடித்தபசு திருவிழா – சங்கரன்கோவில்



புழங்கு பொருட்கள் – இராஜபாளையம்



கட்டுரை வழங்கியபோது

'கிராமங்களே இந்தியாவின் ஆன்மா' என்றார் மகாத்மா. இந்தியப் பண்பாட்டின் நிலைக்களன்கள் வட்டாரங்கள். தமிழகக் கிராமங்களைக் குட்டிக் குடியரசுகள் என்பர் பட்டன் ஸ்டெயின், அவை தனித்தியங்கும் ஆற்றல் கொண்டவை என்பர். அந்த அடிப்படையில்

| | |
|---|---|
| | தென்னகத்தின் தனித்தியங்கும் கூறுகளையும் அதில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிகளையும் காணமுடிகிறது. உலகமயத்திற்குப் பின்பு பொது மனிதத்திரளாகச் செயல்படும் நிர்பந்தம் உருவாகியிருக்கிறது. இனக்குழுக்களின் முக்கிய அடையாளச் சிக்கல் இது. மரபை துடைத்தெறிந்துவிடாமலும் நவீனத்துவத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாமலும் இனக்குழுக்கள் இயங்கும் நிலைகளைப் புரிந்து கொள்ள, இந்த ஆய்வேடு துணைநிற்கும்.<br><br>படைப்பாளிகள் தனது இனக்குழு குறித்த மரபறிவு, பிற இனக்குழுக்கள் குறித்த பட்டறிவு, அந்த வட்டாரத்தில் நடந்த உண்மை சம்பவங்கள், வரலாற்று நிகழ்வுகள், களத்தரவுகள், ஆகியவை ஒருங்கிணைந்து படைப்பில் வெளிப்பட்டுள்ளன. இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கியப் போக்குகளின் தனித்துவம் இது. ஒரு இனக்குழு பற்றி பிறிதொரு இனக்குழுவைச் சார்ந்த படைப்பாளிகள் எழுதும்போது இனவரைவியல் யதார்த்தம் பின்னகர்ந்துள்ளது. கிராமங்களில் நகரியம், நகரங்களில் கிராமியம் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை இலக்கியங்கள் கொண்டு அறிந்துகொள்ள இவ்வாய்வேடு உதவும். ஒரே இனக்குழு வாழும் கிராமம், பல இனக்குழுக்கள் வாழும் கிராமம் என இரண்டின் அசைவாக்கங்களும் வேறுபடுகின்றன. தென்தமிழ் நாட்டின் நீர் நிலைகள், தாவர வழக்காறுகள், பறவைகள்,விலங்குகள் குறித்த இலக்கியப் பதிவுகள்(ஒரு கதையில் கி.ரா.27ஆடுகளைக் குறிப்பிடுகிறார்) சூழலியலில் ஆய்விற்கு உதவும்.<br><br>தென்தமிழகத்தில் வாழும் இனத்தொகுதிகளை இலக்கியங்களின் வழியாகவும் களஆய்வின் வழியாகவும் ஆய்வு தொகுத்திருப்பது முக்கியமானது. இனக்குழுக்களின் முதன்மையான சிக்கல்கள், அடையாள நெருக்கடிகள் இவ்வாய்வில் இடம்பெற்றிருக்கிறது. இதன் மூலம் வருங்காலங்களில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நலத்திட்டங்களைக் கூடுதலாகச் செய்வதற்கு இப்பேராய்வுத் திட்டம் உதவியாக இருக்கும். தென் தமிழ்நாட்டில் காணப்படும் மனித உரிமை சார்ந்த நெருக்கடிகளை இலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை ஆய்வு வெளிக்கொணர்ந்துள்ளது. குழு முரண்களைக் களைந்து இணக்கமாகச் செயல்பட இவ்வாய்வு பெரும் பலன் அளிக்கும். தென்னகத்தில் வாழும் இனக்குழுக்களின் பொருளாதார நெருக்கடிகள் கவனப்படுத்தப் பட்டிருப்பதால் புதிய தொழில்துறை சார்ந்த நடவடிக்கைகளைத் தொடங்கி மக்களின் வாழ்வாதரங்களை உயர்த்த இவ்வாய்வேடு உதவும். |
| 16 | Whether any Ph.D. Enrolled/<br>produced out of the project Yes, REGN NO : P4566, Date 06.06.2016<br>தலைப்பு:<br>தமிழ் நாவல்களில் பழங்குடி மக்களின் வாழ்வியல்<br>ஆய்வாளர் : க. சிவக்குமார், மதுரைக் கல்லூரி, மதுரை<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.<br>நெறியாளர், முனைவர் ந. இரத்தினக்குமார், மதுரைக் கல்லூரி, மதுரை. |
| 17 | No of publications out of the project - 12 |
| | பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு பேராய்வுத் திட்டத்திற்காகத் தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்று வாசித்தது. ஆய்விதழ்களில் பிரசுரம் பெற்றது, கட்டுரைகளாக நூல்களில் அச்சாக்கம் பெற்றவை போன்ற விவரம்:<br><br>1. உதயசங்கர் கதைகள் கள்ளமின்மையின் கொண்டாட்டங்களும் புறக்கணிப்பின் வாதைகளும், தேசிய கருத்தரங்கம், பாளையங்கோட்டை, நூல்- கரிசல் இலக்கிய வளம், |

(தொ.) சிற்பி பாலசுப்பிரமணியம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம், கோவை, 641 048, 2015

2. வரலாற்றுத் திறனாய்வியல் நோக்கில் சிறுபாணாற்றுப்படையும் ரகுவம்சமும் (இனக்குழுவை முன்வைத்து), 06.01.2016, பன்னாட்டுக் கருத்தரங்கம், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21
3. தனிநபர் உளவியல் சங்கப் பிரதிகளை முன்வைத்து, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், காலண்டிதழ், ஜூலை 2016,மதுரை, ISSBN 2454-3993
4. இனவரைவியலும் இலக்கியமும், நூல் - திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும்,(தொ.) வெளியீடு, கயல் கவின், சென்னை 2016, பதிப்பு, கருத்துப்பட்டறை, ISBN938510959-6
5. நாவலும் திரையும், பரதேசியை முன்வைத்து சில வரைவுகள், படச்சுருள், மாதஇதழ், சென்னை, ஆகஸ்ட்,2016
6. வைரமுத்து நாவல்களில் இனக்குழு கதையாடல்கள், நூல் - திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முகவாசிப்புகளும், (தொ.)வெளியீடு கயல் கவின், சென்னை 2016 பதிப்பு, கருத்துப்பட்டறை, ISBN 938510959-6
7. அலைகுடிகளின் நாவல்களை முன்வைத்து சில சொல்லாடல்கள், பன்முக மேடை, இலக்கிய இதழ் 3, காலண்டிதழ், தேனி, பிப்ரவரி, 2017
8. கீழடி எனும் தொல்நகரம், தொல்லியல் கருத்தரங்கம், 21 ஏப்ரல் 2017, கருத்துப்பட்டறை, மதுரை, நூல் - தமிழர் தொல்லியல் சிந்துவெளி முதல் கீழடிவரை, கருத்துப்பட்டறை, மதுரை ISBN 978-81-9249-858-4
9. காலனிய ரேகைச் சட்டமும் இனக்குழுக்களின் அடையாள அரசியலும், பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம், நூல் - உலகளாவிய தமிழ் - காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும்,அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,சிவகாசி, ISBN 978-93-83191-27-7,டிசம்பர் 2017
10. தமிழ் நாவல்களில் காலனிய மயக்கங்களும் பின்காலனிய விசாரணைகளும், (தொ.)நூல் - பின்காலனியம், இலக்கியம், அரசியல், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை,2017,ISBN 817735881-2
11. கி. ராஜநாராயணனின் படைப்புகளில் வறுமை, க.சிவக்குமார் (ஆய்வுத்திட்ட உதவியாளர்) ஆய்வுச் சிந்தனைகள், ஆய்வுத் திட்ட உதவியாளர், ஐந்தமிழ் ஆய்வு மன்றம், மதுரை ஏப்ரல், 2016
12. தமிழ்ப் பழங்குடி மக்களின் உணவு முறைகள், க. சிவக்குமார், (ஆய்வுத் திட்ட உதவியாளர்) செந்தமிழ் அறக்கட்டளை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2016

Principal Investigator

Dr.N.RATHINAKUMAR, M.A.,M.Phil.,Ph.D
Principal Investigator
UGC MAJOR PROJECT
The Madura College (Autonomous)
Madurai - 625 011

THE MADURA COLLEGE (AUTONOMOUS) MADURAI 625 011

Principal
PRINCIPAL
THE MADURA COLLEGE (Autonomous)
MADURAI - 625 011



தொகுப்பாசிரியர்கள்
சிற்பி பாலசுப்பிரமணியம்
ப. க. பொன்னுசாமி
கரிசல்
இலக்கிய வளம்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் 641 048

மனுசி வீட்டுக்குத் தான் போகப்போகுது" (142) தாங்க முடியாத கொடுமை நிகழும் பொழுது உழைப்பாளிகள் தங்களையறியாமலேயே ஒன்று திரள்வதை இது காட்டுகிறது. இது வர்க்கப் போராட்டத்தில் ஒரு வகையாகும்.

"ஒரு கிராமம் துப்புரவு செய்யப் படுகிறது" (வர்ணங்களில் 116-167) ஒரு கிராமத்திற்கு வந்துள்ள ஆசிரியர் நல்ல முத்து பழைய தலை முறைக்கு எதிராகப் போராடி கிராமத்தையே மாற்றும் கதை ஆகும் இது. இங்கும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக அடித்தள மக்கள் அணிதிரள்வதைக் காண்கிறோம். ஊர்ப்பெரியவர் இறந்த பின்னர் வழக்கமாக வேலை செய்பவர்கள் வேலைக்கு வராமல் இருக்க, பெரியவர் பிணம் அனாதையாக எரிக்கப்படுகிறது. இது பழைய வழக்கங்களுக்கு பலத்த அடியாகவும், பண்ணை அடிமை முறைக்கு எதிராகவும் உள்ளது. இதனை ஆசிரியர் நயம்படச் சித்திரிக்கிறார்.

முத்தானந்தத்தின் படைப்புகள் கரிசல் மக்களைப் பற்றியதாக இருந்தாலும், இந்த எல்லையில் இருந்து மீறி அவர் ஒரு பொதுத்தளத்திற்கு வருகிறார். அது வர்க்க முரண்பாடு என்பது. இதனைச் சித்திரிக்கும் பொழுது அவர் யதார்த்த வாத நிலைப்பாட்டிற்கு வருகிறார். கிராமப் புறங்களில் காணப்படும் வகைப்பாடான பாத்திரங்களைப் படைக்கிறார். அவர்கள் மூலம் சமுதாய ஆய்வில் ஈடுபடுகிறார். அவர் தனது அனுதாபம் முடிவதையும் உழைக்கும் மக்கள் பால் காட்டுகிறார். அவ்வாறு காட்டும் பொழுது சமுதாயவிமர்சனத்தில் ஈடுபடுகிறார். ஆளும் வர்க்கத்தினரை விமர்சிக்கிறார். அவர்களைக் கேலியும் செய்கிறார். அவரது படைப்புகள் தனிப்பட்ட சூழ்நிலை பற்றிய ஆய்வில் தொடங்கி பொதுத் தளத்திற்குச் செல்கின்றன.


**ஆதாரங்கள்**

- மூல நூல்கள் (சூரங்குடி அ. முத்தானந்தத்தின் படைப்புகள்)
- அற்ப ஜீவிகள் - இலக்கியச் சிந்தனை வானதி... 1980
- ஓ பரமபிதாவே -(தொ.ஆ) புன்னைவன ராசன் - 1991
- வர்ணங்களில் - குமரிப்பதிப்பகம் - 1994
- அன்புள்ள - பாவை சென்னை 2000
- சுவரை நம்பியா சித்திரங்கள் - நியூ செஞ்சுரி புத்தக நிலையம் - 2001
- சூல்ஆடு - மித்ர ஆர்ட்ஸ் கிரியேஷன்ஸ் - 2003
- கரிசல் காட்டில் ஒரு அத்தையும் மாமாவும் - அருவி பதிப்பகம் - 2008
- நல்லம்மா - (நாவல், அருவி பதிப்பகம்) - 2007




# உதயசங்கர் கதைகள் : கள்ளமின்மையின் கொண்டாட்டங்களும் புறக்கணிப்பின் வாதைகளும்

ந. இரத்தினக்குமார்

கரிசல் நிலம் தன் அசைவாக்கங்களின் ஒரு பகுதியாக பலதரப்பட்ட கதைசொல்லிகளை உருவாக்கியபடியே நகர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் நிலத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியிலிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட படைப்பாளிகள் இயங்கி வருவது இந் நிலத்தில் மட்டுமே. இது இம்மண்ணின் பெருமிதம். நவீனத் தமிழ்ப் புனைவு வெளியில் கரிசல் நிலம் சார்ந்த குடிகளின் வாழ்வியல் பதிவு பெற்ற அளவிற்கு பிற வட்டாரங்களின் வாழ்வு விரிவாகப் பதிவுபெற்றதில்லை. தஞ்சை, கொங்கு நிலங்கள் பதிவு பெற்றிருந்தாலும் இங்கு காணப்படும் பன்முகத்தன்மையும் அடுத்தடுத்த தலைமுறைத் தொடர்ச்சியும் இல்லை. கி.ரா., கு.அழகிரிசாமி, பூமணி, சோ. தர்மன், கோணங்கி, ச. தமிழ்ச்செல்வன், லட்சுமணப்பெருமாள் என்று அடுத்தடுத்த தலைமுறைப் படைப்பாளிகளின் வருகை இன்றுவரை கணிசமான அளவில் அதிகரித்து கொண்டுதானிருக்கிறது.

'கரிசல் எழுத்தாளர்கள்' என்று அடையாளப்படுத்தக்கூடிய வரிசையில் தனித்துப் பேசக்கூடிய ஒரு படைப்பாளியாக இருக்கிறார் உதயசங்கர். இரயில்வே துறையில் சில வருடங்களாகப் பணிபுரிந்து வரும் உதயசங்கர் சிறுகதை, குறுநாவல், கிராமியக் கதைகள் படக்கதைகள், உளவியல், மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம், மரபு மருத்துவம், களப்பணி என தன் ஆளுமையை வெவ்வேறுபட்ட தளங்களில் படர்த்திக்கொண்டிருக்கிறார். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வரும் உதயசங்கர் தனது கலை இலக்கிய வெளியில் கதைகளுக்காகவே பெரிதும் அறியப்பட்டவர். அவரது சிறுகதைகள் எண்பதுகளிலே தொடங்கி பல தொகுப்புகளாக வந்திருந்தாலும் மொத்தத் தொகுப்புகளான 'பிறிதொரு மரணம்', (2009) 'கண்ணாடிச் சுவர்கள்' (2011) ஆகிய இரண்டும் இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விரண்டு தொகுப்புகளிலும் அறுபத்தி இரண்டு கதைகள் இருக்கின்றன. இக்கதைகள் குறித்த எனது அவதானிப்புகளைப் பகிர்ந்துகொள்கிறேன்.

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)



தமிழியற்புலம், ஒப்பிலக்கியத்துறை மற்றும்
ஷான்லாக்ஸ் பதிப்பகம் - மதுரை

இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

பொருள்

**கோட்பாட்டுப் பார்வையில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் காளிதாசரின் படைப்புகளும்**

(06.01.2016)

## தொடக்க விழா

நாள் : 06.01.2016, புதன்கிழமை, இடம் : சேதுபதி அரங்கு, தமிழியற்புலம், காலம் : முற்பகல் : 10.15 மணி

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | மாணவர்கள் |
| வரவேற்புரை | : | முனைவர் வை. இராமராஜபாண்டியன்<br>தலைவர்,<br>இக்கால இலக்கியத் துறை,<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| கருத்தரங்க அறிமுகவுரை | : | முனைவர் பெ. சுமதி<br>உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,<br>தமிழியற்புலம்,<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| தொடக்கவுரை | : | பேரா மு.இராஜராஜன்<br>ஆட்சிக்குழு உறுப்பினர் , ஒருங்கிணைப்புக்குழு<br>ம.கா.பல்கலைக்கழகம் |
| தலைமையுரை | : | பேரா ஆ. முத்துமாணிக்கம்<br>பதிவாளர் (பொறுப்பு)<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| சிறப்புரை | : | பேரா செ. சாரதாம்பாள்<br>புலத்தலைவர், தமிழியற்புலம்,<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| வாழ்த்துரை | : | பேரா மு.மணிவேல்<br>தகைசால் பேராசிரியர், தமிழியற்புலம்,<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| நன்றியுரை | : | முனைவர் உ.கருப்பத்தேவன்<br>உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,<br>தமிழியற்புலம், ம.கா.பல்கலைக்கழகம். |

| | | |
|---|---|---|
| பொழிஞர் | : | முனைவர் க.மலைச்சாமி,<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,<br>ஏலவிவசாயச் சங்கக் கல்லூரி, போடி. |
| தலைப்பு | : | சங்கப் பாடல்களும் ரகுவம்ச உவமைகளும் |
| பொழிஞர் | : | முனைவர் அ.வளர்மதி<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,<br>அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி,<br>மதுரை. |
| தலைப்பு | : | கலித்தொகையும் சாகுந்தலக் களவுக் கோட்பாடுகளும். |

## நிறைவு விழா

நாள் : 06.01.2016, புதன்கிழமை, இடம் : சேதுபதி அரங்கு, தமிழியற்புலம், காலம் : பிற்பகல் : 4.45 மணி

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | முனைவர் செ.ரவிசங்கர்<br>உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,<br>தமிழியற்புலம், ம.கா.பல்கலைக்கழகம். |
| சான்றிதழ் வழங்கிச் சிறப்புரை | : | முனைவர் கி.முத்துச்செழியன்<br>மேனாள் துணைவேந்தர்,<br>பெரியார் பல்கலைக்கழகம், சேலம். |
| கருத்தரங்க மதிப்புரை | : | மு.முத்துமாறன்<br>முனைவர்பட்ட ஆய்வாளர் , தமிழியற்புலம்<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| | : | த.மணிமேகலை<br>முனைவர்பட்ட ஆய்வாளர் , தமிழியற்புலம்<br>ம.கா.பல்கலைக்கழகம். |
| நன்றியுரை | : | முனைவர் பெ.சுமதி<br>உதவிப்பேராசிரியர்,<br>ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,<br>ம.கா.பல்கலைக்கழகம். |

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்**
முனைவர் பெ. சுமதி
உதவிப்பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
ம.கா.பல்கலைக்கழகம்.

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**
முனைவர் இரா.இராமராஜபாண்டியன்
முனைவர் உ.கருப்பத்தேவன்
முனைவர் போ.சத்தியமூர்த்தி
முனைவர் ந.இரகுதேவன்
முனைவர் பா.சங்கரேஸ்வரி
முனைவர்செ.ரவிசங்கர்

அமர்வுகள் : சேதுபதி அரங்கம், தமிழியற்புலம் நாள் : 06.01.2016, புதன்கிழமை

காலம் : முற்பகல் : 11.15 - 12.15 மணி

**அமர்வு 1**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **முனைவர் வை.இராமராஜபாண்டியன்,** தலைவர், இக்கால இலக்கியத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பொழிஞர் | : | **தகைசால் பேராசிரியர் அ.ஆலிஸ்,** பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி. |
| தலைப்பு | : | **தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் - சாகுந்தலத்தில் காட்சிச் சித்திரிப்புகளும் உவமைகளும்** |
| பொழிஞர் | : | **பேரா பா.ஆனந்தகுமார்,** காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம், திண்டுக்கல். |
| தலைப்பு | : | **சங்க அகக்கவிதைகள் - காளிதாசனின் காவியங்களில் ஊடிமை இலக்கியத் தனம்.** |
| பொழிஞர் | : | **பேரா வெ.ஜெயலட்சுமி,** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல். |
| தலைப்பு | : | **தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் - ரகுவம்சத்தில் உள்ளுறை.** |

காலம் : முற்பகல் : 12.15 - 1.30 மணி

**அமர்வு 2**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **முனைவர் ந.இரகுதேவன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பொழிஞர் | : | **முனைவர் ந.இரத்தினக்குமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை. |
| தலைப்பு | : | **வரலாற்றுத் திறனாய்வியல் நோக்கில் சிறுபாணாற்றுப்படையும் ரகுவம்சமும்.** |
| பொழிஞர் | : | **முனைவர் ச.பொ.சீனிவாசன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி மூணார், கேரளா. |
| தலைப்பு | : | **இயற்கைக் கோட்பாட்டு நோக்கில் ஆற்றுப்படையும் மேகதூதுவும்.** |
| பொழிஞர் | : | **முனைவர் பொன். சசிக்குமார்,** மூத்த பாடத்திட்ட வள மேம்பாட்டு அதிகாரி, கல்வி அமைச்சு, சிங்கப்பூர். |
| தலைப்பு | : | **உளவியல் கோட்பாட்டுப் பார்வையில் சங்க அகப்பாடல்களும் காளிதாசர் படைப்புகளும்.** |
| பொழிஞர் | : | **முனைவர் பா.சங்கரேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| தலைப்பு | : | **செவ்வியல் இலக்கியத்தில் தூது அமைப்பும் மேகதூதும்.** |

அமர்வுகள் : சேதுபதி அரங்கம், தமிழியற்புலம் நாள் : 06.01.2016, புதன்கிழமை

காலம் : பிற்பகல் : 2.15 - 3.30 மணி

**அமர்வு 3**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **முனைவர் போ.சத்தியமூர்த்தி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பொழிஞர் | : | **முனைவர் யாழ் சு.சந்திரா,** இணைப்பேராசிரியர் ,தமிழ்த்துறை, அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை. |
| தலைப்பு | : | **செவ்வியல் இலக்கியம் - காளிதாசர் படைப்புகளில் தொன்மம்.** |
| பொழிஞர் | : | **முனைவர் செ.ரவிசங்கர்,** உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| தலைப்பு | : | **குறுந்தொகையும் - சாகுந்தலத்தில் ரசக்கோட்பாடும்.** |
| பொழிஞர் | : | **முனைவர் நா.சிவகுரு,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். |
| தலைப்பு | : | **ரகுவம்சத்தில்-சங்க இலக்கியத்தின் தாக்கம்** |

காலம் : பிற்பகல் : 3.30 - 4.45 மணி

**அமர்வு 4**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **முனைவர் உ.கருப்பத்தேவன்** உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம். மதுரை. |
| பொழிஞர் | : | **முனைவர் மு.தேவகி** உதவிப்பேராசிரியர், தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கைலக்கழகம், மதுரை. |
| தலைப்பு | : | **பரிபாடல், திருமுருகாற்றுப்படை - குமாரசம்பவத்தில் தத்துவநோக்கு.** |
| பொழிஞர் | : | **முனைவர் உ.கருப்பத்தேவன்** உதவிப்பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம். மதுரை. |
| தலைப்பு | : | **சங்க அகஇலக்கிய மரபுகளும் - ருதுசம்ஹாரமும்** |

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மலர்.1 இதழ்.1 ஜூலை, 2016 காலாண்டிதழ்

# Shanlax International Journal of Tamil Studies

Vol. 1 No. 1 July 2016 Quarterly




ISSN : 2454-3993

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

*A Peer-reviewed- Refereed/Scholarly Quarterly Journal*

 ISSN : 2454-3993

# தனிநபர் உளவியல் சங்கப் பிரதிகளை முன்வைத்து...

"என்னுடைய சிந்தனை எனக்குள் இல்லை. எனக்கு வெளியே இருக்கிறது. நான் என்பதும் எனக்குள் இல்லை. அது எனக்கு வெளியே உள்ளதால் சுயத்தைக் கட்டமைப்பது மற்றமைதான் - லக்கான்"

முனைவர் ந. இரத்தினக்குமார்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை,
மதுரைக் கல்லூரி, மதுரை

இருபதாம் நூற்றாண்டைப் பரபரப்பிற்கும் கலவரத்திற்கும் உள்ளாக்கிய கொள்கைகளாக ஆல்பர்ட் ஐன்ஸ்டனின் சார்பியல் கோட்பாடு, டார்வினின் உயிர்ப் பரிணாமக் கொள்கை, காரல் மார்க்ஸின் பொருளாதாரக் கோட்பாடு, சிக்மண்ட் ப்ராய்டின் உளவியல் கொள்கை போன்றவற்றை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். இவற்றில் இலக்கியத்தோடு மிக நெருங்கிய பிணைப்பு கொண்டதாக உளவியல் காணப்படுகிறது. பிராய்டின் உளவியல் கருத்துக்கள் யுங், ஆட்லர், லக்கான், எரிக்போரம், போன்றவர்களால் விரித்தும் மறுத்தும் வளர்தெடுக்கப்பட்டு, இன்று உளவியல் பரவி நிற்கும் முக்கிய அறிவுத்துறையாக் காட்சியளிக்கிறது. தனிமனிதன் குறித்து உளவியல் முன்வைத்துள்ள கருத்துக்களைக்கொண்டு சங்கப் பிரதிகளை (மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை) வாசிக்க முயலுவோம்.

**காஞ்சியும் வாடையும் முன்வைக்கும் கருத்தியல்கள்**

பத்துப்பாட்டில் ஆறாம் பாடலான மதுரைக் காஞ்சி (782 அடிகள்) நிலையற்ற நிரம்பா வாழ்விற்கு அமைதியும், உரமும் வேண்டுதல் பொருட்டு அகவற்பாவைக் கொண்டு மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது. இதில் "நெடுஞ்செழியன் பகைவர் அரண்களையும் காவல் மரங்களையும் அழித்தல், சேர சோழ மன்னரையும் குறுநில மன்னர் ஐவரையும் வெல்லல், பகை நாட்டில் கவர்ந்த பொருள்களை வறியவர்களுக்கு வழங்கல், சான்றோர் வழியில் நடத்தல், வாய்மை–பொறுப்பு–கொடை முதலிய நல்லியல்புகள் கூறப்பட்டுள்ளன"[1]. பாண்டியனுக்கு அறிவுரை கூற எழுந்த இந்நூல் பத்துப்பாட்டில் மிகப்பெரிய பாடல் என்பதும் கவனிக்கத்தக்கது.

நக்கீரனார் பாடிய ஏழாம்பாடலான நெடுல்வாடை (188 அடிகள்) "தனிமனித உணர்வாகிய காதலும், சமுதாய உணர்வாகிய கடமையும் ஆகிய இருவேறு இயல்புகளை ஆசிரியப்பாவால் விளக்கி உரைக்கும் நூல்"[2]. செவிலித்தாயின் கொற்றவை வழிபாடு, தலைவனைப் பிரிந்து நெடிய வாடையால் வருந்தும் தலைவி நிலை, கூதிர் காலத்தில், மக்கள், விலங்கு, பறவை முதிலியன குளிரால் இயல்புமாறல், பாசறை அமைப்பின் தன்மை, வீரர்களின் ஓய்வு, யவனர்களின் செயல், இயற்கையின் இயல்பு போன்றவை உளவியல்பூர்வமாக விளக்கப்பட்டுள்ளன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி அவனது வெற்றிச்சிறப்பு, கொடைச்சிறப்பு, நாட்டுவளம், மக்கள்நிலை என இவ்விரு நூல்களும் முன்வைத்திருந்தாலும் இரண்டின் பாடுபொருள்களும் தனிமனித அறத்தை, வலியுறுத்தி,





[illegible] சூழ்நிலைகளை எதிர்கொள்ள மனிதத்திறன் எடுக்[illegible] [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. அம்முயற்சிக[illegible] [illegible] சுயஉணர்வு, நம்பிக்கை, குறிக்கோள், [illegible] [illegible] கிரியா ஊக்கிகள் மறைந்து இருப்பதை அறியமுடிகி[illegible]

**[illegible] தன்னிலைகளின் இயல்பும் கட்டமைப்பும்**

[illegible] ஆழ்மனம் (Id), விழிப்புமனம் (Ego), மேல்மன[illegible] [illegible] புதிய மனோவியல் தேடல்களுக்கு வித்திட்[illegible] [illegible] அறிவுசார் பரப்பில் புதிய விளைவுகளை ஏற்படுத்தின. [illegible] [illegible] கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு மனித[illegible] [illegible] பின்கண்டவாறு வகைப்படுத்தினர். இவை, தனிமனித[illegible] [illegible] தனித்த கூறுகளாகவும் இருக்கின்றன.

[illegible]

1. ஆளுமைத்திறன் (astery Competence)
2. [illegible] செயல்கள் (Autonomous Functions)
3. [illegible] செயல்கள் (Adaptive Function)
4. [illegible] முறைப்படுத்திக் கட்டுப்படுத்துதல் (Regulation And [illegible]
5. [illegible] (Judegement)
6. [illegible] குறித்த புலன் உணர்வு/நடைமுறை அறிவு (Sense of [illegible]
7. தற்காப்புக் கூறுகள் (Elements of Defence)
8. [illegible] உறவு / பொருள் உறவு (Object Formation)
9. அடையாள உருவாக்கம் (Identity Formation)
10. சிந்திக்கும் முறை (Thought Process)

இப்பண்புகளைச் சிறப்பாகப் பின்பற்றும் மனிதன் [illegible] [illegible] என்று நம்புகின்றனர். உளவியல் அறிஞர்கள் [illegible] [illegible] காணக்கிடைக்கும் பண்புகளாகவும் இவற்றைக் [illegible] கவனிக்கத்தக்கது.

**ஆளுமைத்திறன் (Mastery Competence)**

தனிமனிதனின் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் மிக முக்கி[illegible] [illegible] ஆளுமை மேம்பாடு. மனிதனின் ஒழுக்கம், தன்னம்பிக்கை, [illegible] [illegible] சிந்திக்கும் முறை (Thought Process) இவற்றைப் பொறுத்து [illegible] [illegible] 'நடத்தைகளின் குணங்கள், விருப்பு வெறுப்புகள், [illegible] [illegible] பற்றிய உணர்வுகள் முதலியவற்றை ஆளுமை [illegible] தன்னம்பிக்கை இவற்றை மனதின் ஆழத்தில் உள்ளுறையாகக் [illegible] [illegible] மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் போர்ப்பாசறையில் [illegible] [illegible] இருக்கும்போது பயமும், நம்பிக்கையும் மனதின் ஆ[illegible] [illegible] அவதானிக்க முடியும். மதுரைக் காஞ்சியும் எழுவரை [illegible] [illegible] வழங்கும் திறத்திலும், வீரம், கருணை, ஒருங்கிணைக்கும் [illegible] [illegible] ஆற்றல் வாய்ந்த ஊக்கிகளையும் பதிவு செய்திருப்பதும் [illegible]

# திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும்



ந. இரத்தினக்குமார்

# இனவரைவியலும் இலக்கியமும்

"குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூட,
கானவர் மருதம் பாட, அகவர்
நீல்நிற முல்லைப் பல்திணை நுவல,
கானக் கோழி கதிர் குத்த,
மனைக் கோழி தினைக் கவர
வரை மந்தி கழி மூழ்க,
கழி நாரை வரை இறுப்ப,
தண் வைப்பின் நால்நாடு குழீஇ"

- முடத்தாமக் கண்ணியார்

'இனவரைவியல்' எனும் முறையியல் மானுடவியலின் ஒரு பிரிவாக அறியப்படுகிறது. மொழி, சாதி, இனம் போன்ற ஏதேனும் ஒரு காரண அடிப்படையில் திரண்ட மக்கள் குழுவின் (Ethnic group) பண்பாட்டை விவரிக்கும் கலையாகக் கருதப்படுவதோடு, அண்மையத் திறனாய்வுப் போக்குகளில் முக்கிய அணுகுமுறையாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. தொடக்கத்தில் 'Ethnography' என்பதற்குத் தமிழில், இனவியல், இனக்குழுவியல், இனவிளக்கவியல் என்றெல்லாம் அழைக்கப்பட்டது. இன்று, 'இனவரைவியல்' என்ற சொல்லே, தரப்படுத்தப்பட்டு பொதுச்சொல்லாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒரு தனிப்பட்ட சமூகத்தின் புவிச்சூழல், பண்பாட்டு மயமாகும் காரணிகள், வாழ்வியல் பகுப்புமுறைகள், நாட்டார் வழக்காறுகள், சடங்குகள், அரசியல் முறைகள், மரபுச் சட்டங்கள், மக்களின் உளவியல் பாங்குகள், தொழில்சார் உற்பத்திப் பங்கீட்டு முறைகள் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பண்புகளை அடிப்படைகளாகக் கொண்டுள்ளது இனவரைவியல். "குறிப்பிட்ட ஒரு மானிடக் குழுவில் அல்லது வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி

# வைரமுத்துவின் நாவல்கள் கட்டமைக்கும் இனக்குழுக் கதையாடல்கள்

இலக்கிய விமர்சனம் என்பது பண்பாட்டையும் அரசியலையும் பற்றிய விமர்சனமாகத்தான் இருக்கமுடியுமே தவிர அழகியல் ரீதியான விமர்சனமாக இருக்கமுடியாது.

- கிராம்ஷி

பாண்டிய நாட்டில் மதுரைக்கு மேற்கே தனித்த நிலப்பகுதிகளைக் கொண்டு, நாயக்கர் ஆட்சிக்கு முன்பிருந்தே தன்னரசு நடத்தி வந்த வட்டாரமாக அறியப்படுவது எட்டு நாடு. பிரெஞ்சு ஆய்வாளர், லூயி டூமாண்ட் இதை "Kallar Nad', 'Kallar country" என்றும் அறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளகம், கள்ளப்பற்று[2] என்றும் குறிப்பிடுவர். உசிலம்பட்டி உள்ளிட்ட இந்த எட்டு நாடுகளையும் இருபத்து நான்கு உபகிராமங்களையும் உடைய இவ்வட்டாரத்தைக் 'கிழக்குச் சீமை' என்று அழைப்பர். இதற்கு எதிர்புறமாக, மக்கள் வழக்காறுகளில் சொல்லப்பட்டு வரும் பகுதிகள், வடக்குச் சீமை மற்றும் மேற்குச் சீமை. திண்டுக்கல் வட்டாரங்களை வடக்குச் சீமை என்றும் தேனி வட்டாரங்களை மேற்குச் சீமையென்றும் அழைக்கின்றனர், இப்பகுதிவாழ் மக்கள். இம்மூன்று பகுதிகளிலும் 'பிரமலைக் கள்ளர்' எனும் இனக்குழுவினர் மிகுதியாக வாழ்ந்து வருகின்றனர். மேற்குச் சீமை எனும் நிலப்பகுதியைப் பின்புலமாகக் கொண்டவை, வைரமுத்துவின் படைப்புகள். குறிப்பாக, 'கள்ளிக்காட்டு இதிகாசம்' (2001), 'கருவாச்சி காவியம்' (2006), 'மூன்றாம் உலகப்போர்' (2012) ஆகிய மூன்று நாவல்களும் 'பிரமலைக் கள்ளர்'களின் வாழ்வியலை மையமிட்டவை. இப்பனுவல்கள் கட்டமைக்கும் 'இனக்குழுக் கதையாடல்'கள் இக்கட்டுரையின் முதன்மை. இவை, மூன்று



பகுதிகளாக அமைந்துள்ளன. 1. நாவல்களின் மையக் கதையாடல் 2. நாவல்களின் தனித்துவமும் சிறப்பும் 3. நாவல்களின் சிக்கல்களும் அரசியலற்ற வெளிகளும்.

I

## நாவல்களின் மையக் கதையாடல்

கள்ளிப்பட்டி, சொக்கத்தேவன் பட்டி, அட்ணப்பட்டி ஆகிய மூன்று கிராமங்களையும் அவற்றைச் சுற்றியுள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் (தேனி மாவட்டம்) வாழும் மானாவாரி மனிதர்களின் கதைகளையும் பிரதானப்படுத்தி மூன்று நாவல்களும் படைக்கப்பட்டுள்ளன.

## கள்ளிக்காட்டு இதிகாசம்

கள்ளிக்காட்டில் பேயத்தேவர் கடும் உழைப்பையும் வைராக்கியத்தையும் உரமாகக் கொண்டு வாழ்பவர். உணவுக்கும் அடிப்படைத் தேவைக்கும் உழைக்கும் விவசாயி. அவருக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளும், இரத்த உறவுகள் வழியாக வரும் இன்னல்களும் கள்ளிக்காட்டு இதிகாசத்தின் கதையோட்டம். இரண்டாம் முறையாக திருமணமான தனது மூத்த மகள் செல்லத்தாயிக்கு வாக்களித்தபடி வரதட்சணை கொடுக்க முடியாத நிலை, இரண்டாவது மகள் மின்னலின் கணவன் கொலை செய்து சிறை செல்ல, அவளின் பாரத்தையும் சுமக்கும் சூழல், செல்லத்தாயின் முதல் கணவனுக்குப் பிறந்த மொக்கராசுவை வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தம், பொறுப்பற்ற மகன் சின்னுவால் வரும் அவமானங்கள், நிலங்களைக் காப்பாற்ற முடியாமல் கடனுக்காக வண்டிநாயக்கரின் தொடுப்புக்கு நிலத்தை எழுதிவைக்கும் அவலம், நோய்வாய்பட்ட தனது மனைவி அழகம்மாளுடன் பல வருடங்களாகப் பேசுவதில்லை என்றாலும் அவளை வாஞ்சையுடன் நேசிப்பவர். வைகை அணை கட்டுவதற்காகப் (1958) பிறந்த வீடு, உழைத்த நிலம், வாழ்ந்த ஊர் என அனைத்தையும் இழந்து, இறுதியில் வைகைத் தண்ணீர் குடித்த, தன் வீட்டோடு மரிப்பது, பேயத்தேவருக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை. ஊடுபாவாக பேயத்தேவருக்கும் நாவிதரின் மகள் முருகாயிக்குமான நெகிழ்ச்சியான காதல், வண்டிநாயக்கருக்கும் அவருக்குமான ஆத்மார்த்தமான சிநேகம், அம்மைநோயைப்

# படச்சுருள்

மலர் 2 | இதழ் 04 | ஆகஸ்ட் 2016 | ₹20



2

## இலக்கியமும் சினிமாவும் சிறப்பிதழ்

சொர்ணவேல்
B. லெனின்
தங்கர்பச்சான்
அம்ஷன் குமார்
பாஸ்கர் சக்தி

சு. தியடோர் பாஸ்கரன்
கு. ஜெயச்சந்திர ஹாஷ்மி
ந. இரத்தினக்குமார்
மு.வி. நந்தினி
தினேஷ்

ந. இரத்தினக்குமார்

நாவலும் திரையும்:

# பரதேசியை முன்வைத்து சில வரைவுகள்...



தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை

பன்முக

# மேடை

இலக்கிய இதழ் 3 | பிப்ரவரி 2017 | விலை ரூ.50





**...காலம் போகும், வார்த்தை நிற்கும் –பிஎன்எஸ்.பாண்டியன்**



ஆன்டன் செக்காவ் நாடின் கார்டிமர் டோரிஸ் லெஸிங்



# அலைகுடிகளின் நாவல்களை முன்வைத்து சில சொல்லாடல்கள்

ந. இரத்தினக்குமார்

சிறகு விரித்து
விதையொன்று
அலையும்
முளைக்க
ஒரு பிடி
மண்தேடி

- இன்குலாப்

புலம்பெயர் இலக்கியம், குடிபெயர் இலக்கியம், அலைகுடி இலக்கியம் எனப் பலவாறாக விளிக்கப்படும் இச்சொல்லாடல், தனித்த வகைமையாக இன்று அடையாளப்படுத்தப்பட்டுவருகிறது. கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் என இலக்கியப் புலங்களில் பல புதிய பண்பாட்டு உரையாடல்களை இவ்வகைமை கொண்டு வந்துள்ளது. அவற்றில் பல்வேறு போக்குகள் இருந்தாலும் "புலம்பெயர் நாவல்கள்" என்ற பொருண்மையை மட்டும் முன்வைத்து இங்கு விவாதம் அமைந்துள்ளது. அவ் உரையாடல் பெரும்பாலும் எனது வாசிப்பிற்கு கிடைத்த நாவல்களை அடிப்படையாகக் கொண்டது.

## புலம்பெயர் இலக்கியம் – விளக்கம் - வரையறை

இங்கு நடந்தேறிய புலம் பெயர்தல் சூழல்களை தொகுத்துக்கொண்டால் இன்றைய அலைகுடிகளின் இலக்கியங்களை உரையாட களம் சமைக்கும் புலம் என்பது "நிலம்" எனப் பொருள்படும். பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தொல்குடிகள் தம் நிலத்தை விட்டு பிறிதொரு



# தொல்லியல்

## தமிழர் வரலாற்றுத் தடங்கள்

### சிந்துவெளி முதல் கீழடி வரை


தொகுப்பாசிரியர்கள்

ந.இரத்தினக்குமார்

பெ.க.பெரியசாமி ராஜா

# கீழடி எனும் தொல் நகரம்

ந. இரத்தினக்குமார்

நகரங்களும் துறைமுகங்களும் ஒரு நாட்டின் பிரதான அடையாளங்கள். ஒரு சமூகத்தின் பண்பாட்டுத் தளத்திலும் வணிகத் தளத்திலும் இவை ஆற்றும் பங்களிப்பு முதன்மையானவை. இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட உறையூர், புகார், வஞ்சி, மதுரை ஆகிய நகரங்கள் தொன்மையும் பண்பாட்டுத் தொடர்ச்சியும் கொண்டு நடைமுறையில் உயிர்ப்புடன் இயங்கிவருபவை. இந்நகரங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வு, கல்வெட்டியல், நாணயவியல், மொழியியல், இலக்கியவியல் ஆய்வுகள் இவற்றின் வரலாற்றுச் சிறப்பைக் காட்டுகின்றன. இவ்வாய்வுகளை முன்னெடுத்துச் செல்வதாக அழகன்குளம், கொடுமணல், கீழடி அகழ்வாய்வுகள் அமைந்துள்ளன. ஒன்று துறைமுகம். மற்றவை தொல் நகரங்கள். மூன்றுமே தமிழகத்தின் பிரதான அடையாளங்களாகக் காட்சியளிக்கின்றன. தமிழக வரலாற்றைக் கால அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் நிலை நிறுத்தும் முக்கிய ஆதாரங்களாக இனிவரும் காலங்களில் இருக்கப்போவது இம்மூன்றின் அகழ்வாய்வு முடிவுகளாகத்தான் இருக்கும். தற்போது கிடைத்துள்ள ஆய்வுகளின்படி கொடுமணலைத் தொழில் நகரமாகவும் கீழடியை வணிக நகரமாகவும் அடையாளப்படுத்தியுள்ளனர். கீழடியை முதன்மைப்படுத்தி உரையாட விழைகிறது இக்கட்டுரை. இதற்கு நான்கு தளங்களை அமைத்துக் கொள்கிறது. 1. நகர நாகரிகங்களும் வைகையின் பண்பாட்டு வெளிகளும், 2. கீழடியின் அகழாய்வுப் பணிகள், 3. தொல் நகரமும் வணிகமும், 4. தமிழி எழுத்துக்களும் நகரப் பண்பாடும்

உதவிப் பேராசிரியர்,
மதுரைக் கல்லூரி, மதுரை.

# உலகளாவிய தமிழ் - காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும்

தொகுதி-2




பதிப்பாசிரியர்கள்

முனைவர் இரா. இளவரசு
முனைவர் க. சிவனேசன்
முனைவர் சு. குமரன்
முனைவர் கே. சுபாஷினி

# 152 காலனிய ரேகைச் சட்டமும் இனக்குழுக்களின் அடையாள அரசியலும்

ந. இரத்தினக்குமார்
உதவிப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி
மதுரை 625 011

காலனிய அரசு குற்றப்பரம்பரைச் சட்டத்தை(Criminal Tribe Act) 1871-இல் இந்தியாவில் அமுல்படுத்தி, திருத்தங்கள் செய்து 1911இல் சென்னை இராஜதானியில் நடைமுறைப்படுத்தியது. சென்னை மாகாணத்தில் வாழ்ந்த ஒட்டர், உப்புக் குறவர், பிறமலைக் கள்ளர், வேப்பூர் பறையர், ஆப்பநாட்டு மறவர், வலையர் உட்பட பல சமூகங்களைக் குற்றச்சமூகங்களாகக் 'காலனியம்' அறிவித்தது. பிரமலைக்கள்ளர், வேப்பூர் பறையர், ஆப்ப நாட்டு மறவர், உப்புக்குறவர் ஆகியோர் மீது மட்டும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மற்ற சாதிகள் இச்சட்டத்தின்கீழ் பட்டியலிடப்பட்டாலும் முதல் தகவல் அறிக்கைகள் கூட அவர்கள் மீது பதிவு செய்யப்படவில்லை. தஞ்சை வாண்டையார் போன்ற நிலவுடைமையாளர்களுக்கு வேளாண்மைத் தொழில் செய்ய அதிக நிலங்கள் பரவலாக இருந்தாலும் ஈச நாட்டுக் கள்ளர்களுக்கும், பெரியாற்றுப் பாசனம் 1890களிலே ஏற்படுத்தப்பட்டு அது வெள்ளலூர் நாட்டுக் கள்ளர்களின் வாழ்வியலில் திருப்பங்களைச் செய்ததாலும் அம்பலக் கள்ளர்களுக்கும் இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

ஒரு சமூகத்தைப் பிறப்பிலேயே குற்றச்சமூகமாகவும் அச்சமூகம் வாழும் வட்டாரத்தையே குற்றப்பகுதியாகவும் அறிவித்துக் கட்டுப்படுத்துகிறது இச்சட்டம். அனைத்து ஆண்களும் காவல் மடங்களில் இரவு தங்கி கைரேகை வைக்கவேண்டும், வெளியூர்களுக்குச் சென்றாலும் அனுமதிச்சீட்டைப் பெற்றுச் சென்றுவிட்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பிவிடவேண்டும். மீறினால் கைது என்பது இச்சட்டத்தின் நடைமுறை. வேட்டைத் தொழில் செய்து வந்த வேப்பூர் பறையர்களும் காவல் தொழில் செய்து வந்த பிரமலைக் கள்ளர்களும் ஆப்ப நாட்டு மறவர்களும் ஆயிரக்கணக்கான கழுதைகளில் உப்பு வியாபாரம் செய்து வந்த குறவர்களும் குறிப்பிட்ட இடத்திற்குள் மட்டுமே வாழவில்லை. பிரதேச எல்லைகளற்று தொழில் செய்து வாழ்ந்த இக்குழுவினரையும் இவர்களின் தொழில் வெளிகளையும் கண்காணிக்க அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஆங்கிலேயர்கள் சென்னை மாகாணத்தில் இச் சமூகத்தினரின் மீது மட்டும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினர்.

மதுரை ஜில்லாவில் வாழ்ந்த பல்வேறு சாதியினரும் புதிய அரசு எந்திரத்துடன் விட்டுக்கொடுத்து இணைந்து கொண்டதைப் போல் பிரமலைக் கள்ளர்களால் சமரசம் செய்துகொண்டு இணைய முடியவில்லை. அமைப்பார்ந்த இனக்குழுவான(Ethno-Structural) பிரமலைக்கள்ளர்களின் வட்டாரம் சார்ந்த சமூக வாழ்வியலும் திருமலை நாயக்கரிடம் பெற்றிருந்த





...டார உரிமைகளும் அவர்களை அடிபணிந்து போகச்செய்யவிடவில்லை. ...னால் குற்றப்பரம்பரைச் சட்டத்தைக் கடுமையாகப் பிரமலைக்கள்ளர்கள் ...திக்க, அது, பிரமலைக்கள்ளர்களை ஒரு மடங்கு கூடுதலாக ஒடுக்கி ...ட்டைக் காலனியத்துவத்திற்குள் (Double Colonization)கொண்டுவந்தது. ...சியாவிலே முதல்முறையாக குற்றப்பழங்குடிச் சட்டத்தை மறுத்து 1920, ...ரல், 03 அன்று திருமங்கலம் வட்டாரம் 'பெருங்காமநல்லூர்' கிராம ...க்கள் கைரேகை வைக்க மறுத்தனர். ஒரு பட்டாலியன் காவல் படை ...யுதங்களுடன் வந்து வலியுறுத்தியும் மக்கள் மறுத்து வேல்கம்பு, ...லக்கை, அறுவாள், சூரி, கற்கள் போன்ற ஆயுதங்களுடன் போராட்டத்தில் ...டுபட்டனர். காலனியம் அப்போராட்டத்தில் ஈடுபட்ட 'மாயக்காள்' என்ற ...பெண் உட்பட பதினாறுபேரைச் சுட்டுக் கொன்றது. [1] பிற சமூகத்தினரின் ...தவிகளும் கிடைக்கவில்லை. கள்ளர்களால் 'ரோசாப்பூத்துரை' என்று ...ன்பாக அழைக்கப்பட்ட 'ஜார்ஜ் ஜோசப்' போன்ற மலையாளத்தை ...தாய்மொழியாகக் கொண்ட ஆங்கில அதிகாரிகள் மட்டும் ...பிரமலைக்கள்ளர்கள் இச்சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கு சட்டப்பூர்வமான ...உதவிகளைச் செய்தனர்.

ஆதிகுடிகளின் தொடக்ககாலக் கிளர்ச்சிகள்(Primitive Rebellion) தோல்வியில் முடிந்தாலும் வரலாற்றின் முக்கிய அரசியல் நிகழ்வு அது. இச்சம்பவம் மேற்குச்சீமையில் அச்சமூகத்தினரிடம் பதற்றத்தை ஏற்படுத்தியது.

**காலனியச் சீர்திருத்தம் - கட்டாயக் குடியேற்றம் - மதமாற்றம்**

பெருங்காமநல்லூர் சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த எதிர்ப்பை உணர்ந்த, ஆங்கிலேய அரசு இரண்டு முறைகளில் கள்ளர்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. 1. ஒடுக்கு முறை 2. நல் வாழ்வுத்திட்டம். ஒடுக்குமுறை என்பது கட்டாயக் குடியேற்றம், குற்றப்பரம்பரைச் சட்டம், மணிப்படுக்கை, காலனியப் பஞ்சாயத்துகள் ஆகியவையாகும். **கள்ளர் பள்ளிகள், கள்ளர் விடுதிகள், கள்ளர் கூட்டுறவு அமைப்புகள், கிறித்தவமயமாக்கல், கள்ள சாரி நிலங்கள், 'பிரமலைச் சீர்திருத்தன்'** எனும் செய்தியிதழ் போன்றவை நல்வாழ்வுத்திட்டங்கள். இத்திட்டங்களும் ஒரு இனக்குழுவை அரசின் சட்டகத்திற்குள் கொண்டுவரும் நகர்வுகள்தான். ஒன்று கடுமையான வழியில், மற்றொன்று மென்மையான வழியில். ஆக, இரண்டுமே ஒடுக்குமுறைகள்தான்.

வேப்பூர் பறையர்கள், பிரமலைக் கள்ளர்கள் ஆகிய இரண்டு சமூகங்களும் கட்டாயமாக அவர்களின் வாழிடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு, பலகுழுக்களாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு இடங்களில் வாழ நிர்பந்திக்கப்பட்டனர். வேப்பூர் பறையர்கள் விழுப்புரம் பகுதிகளிலிருந்து சென்னை ஆசிஸ் நகருக்குக் குடியமர்த்தப்பட்டனர். இன்றுவரை அவர்களின் வம்சாவளியினர் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். பிரமலைக் கள்ளர்களைப் பல குழுக்களாகப் பிரித்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டாயமாகக் குடியேற்றியது காலனிய அரசு. அது, 1930-வரை

# பின் காலனியம்

## சமூகம் - இலக்கியம் - அரசியல்



தொகுப்பாசிரியர்

**ந.இரத்தினக்குமார்**

பின் காலனியம் சமூகம் - இலக்கியம் - அரசியல்

அட்டை வடிவமைப்பு - நரேந்திரன்

நம் கலை இலக்கிய பண்பாட்டு வெளிகளில் உறைந்திருக்கும் காலனியப் படிமங்களைப் புரிந்து கொள்வது எப்படி?

உலகமயச் சூழலில் ஐரோப்பிய மற்றமைகளின் அடையாள அரசியலைப் பின் காலனியம் முன்னெடுப்பது ஏன்?

அடையாள மீட்பு, வேர்களைத் தேடல் இவற்றின் இலக்குகள் எவை?

நம்முடைய பெரும்பாலான அடையாளங்கள் காலனியத்தின் வடிவமைப்பு என்றால் காலனியத்தைக் கட்டவிழ்க்கும் பின் காலனியச் சொல்லாடல்கள் எத்தகையன?

பின் காலனியத்தின் வரலாறு, அணுகுமுறைகள், அதன் அரசியல், தமிழ்ச் சூழலில் நிகழ்த்தப்பட்ட காலனியம் குறித்த ஆய்வுகள் என விரிவான வாசிப்புத் தளங்களை முன்வைக்கிறது இத் தொகுப்பு.

# தமிழ் நாவல்களில் காலனிய மயக்கங்களும் பின் காலனிய விசாரணைகளும்

- ந. இரத்தினக்குமார்

'மௌனம் என்பது சாவுக்குச் சமம். எதுவும் பேசாவிட்டாலும் சாகப் போகிறீர்கள்; பேசினாலும் சாகத்தான் போகிறீர்கள். எனவே பேசி விட்டுச் செத்துப் போங்கள்" - ஃபனான்

இருபத்தோராம் நூற்றாண்டில் பன்முகமான எடுத்துரைப்பு வடிவங்களைக் கொண்டு 'நாவல் களம்' புதிய திசைகளுக்கு நகர்ந்து கொண்டிருக்கிறதென்றால் அது மிகையல்ல. அத்திசை வெளிகளைப் புரிந்துகொள்ள இனவரைவியலும் பின்காலனியச் சொல்லாடல்களும் உதவிகரமாக இருக்குமென்று நம்புகிறேன். இவ்விரண்டு பின்புலங்களை அடியொட்டியே பெரும்பாலான நாவல்கள் சமீபமாக வந்துகொண்டிருப்பதால் இப்படி ஒரு மதிப்பீடு. பிழையாகவும் இருக்கலாம். மதிப்பீடுகள் அவ்வப்போது தேவையாகத்தானே இருக்கின்றன. அதுவும் ஆசிரியருக்கு மிகவும் முக்கியமானதல்லவா?. சரி இருக்கட்டும். பின்காலனியப் பின்புலத்தில் தமிழ் நாவல்களை விவாதிக்க, மதிப்பிட முயற்சிக்கிறது இக்கட்டுரை. அதற்கு மூன்று தளங்களை மையப்படுத்திக் கொள்கிறது. 1. காலனிய மயக்கங்களும் தொடக்ககால நாவல்களும் 2. காலனியமும் காந்திய நாவல்களும் 3. அண்மைய நாவல்களும் காலனியத்தின் மீதான விசாரணைகளும். இவை உரையாடுவதற்கு வசதி கருதியே தவிர முன்தீர்மானத்தோடு அல்ல.

## காலனிய மயக்கங்களும் தொடக்ககால நாவல்களும்

ஆங்கிலேயரின் வருகைக்குப்பின்னராக நிகழ்ந்த அறிவியல் மாற்றங்கள், அச்சுப்பண்பாடு, புதிய போக்குவரத்து, தொழிற்சாலைகளின் பரவல், மத்தியவர்க்கம் உருவாதல்,

உதவிப்பேராசிரியர், மதுரைக் கல்லூரி, மதுரை



சட்டங்களாலான ஜனநாயகம் போன்ற நவீனக் கூறுகளால் (Modernity)பத்தொன்பதின் பிற்பகுதியில் புத்திலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. நகரங்களின் வளர்ச்சி, கல்வியின் பரவலாக்கம், உரைநடையின் பெருக்கம், புதிய அறிவுவெளிக்குள் பல்வேறு சமூகங்களைக் கொணர்ந்தது, புத்தக வாசிப்பு எனும் செயல்பாடு மத்தியதரவர்க்கத்திடம் பரவலாகத் தொடங்கியது, போன்ற பின்புலங்களிலே மாயூரம் வேதநாயகம் பிள்ளை தமிழின் முதல் நாவலான பிரதாபமுதலியார் சரித்திரத்தை (1879) எழுதினார். இது காலனியச் சூழலின் விளைவு. அவரைத் தொடர்ந்து ராஜம் அய்யர் (கமலாம்பாள் சரித்திரம்), அ. மாதவையா (பத்மாவதி சரித்திரம்-1898), நடேச சாஸ்திரி (கிளாரிந்தா), காசிம் மரைக்காயர் (அசன்பே சரித்திரம்) எனப் பலர் இயங்குவதற்கு காலனியம் தந்த அறிவுசார் சூழல் அடிப்படை. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என நவீன இலக்கியம் எனும் வகிபாகம் தனித்து அமைய காலனியச் சூழலே பிரதானம். இது ஆக்கப்பூர்மானதுதான், என்றாலும் அது மேற்கை நோக்கி நம்மை நகர்த்தியதும் பல்லாயிரமாண்டு கதைசொல்லும் மரபின் தொடர்ச்சியை அறுப்பு செய்ததும் விவாதிக்கத்தக்கது.

ஆங்கிலக் கல்வியின் மூலம் பெற்ற அறிவைக் கொண்டு தமிழ்ச் சமூகத்தின் மரபுசார் பண்பாட்டுக் கூறுகளையும் சில முற்போக்குகளையும் தொடக்ககாலத் தமிழ் நாவல்கள் பதிவுசெய்யத் தொடங்கின. பெண்கல்வி, பெண்விடுதலை, சமயஒற்றுமை, சட்டத்தினால் மட்டும் பெறப்படுவதே நீதி எனும் கருத்தியல், பெண்புழங்கு வெளியை அதிகரித்தல், இந்திய தத்துவ விசாரங்களை மீட்டல், கிறித்துவத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தல், சாதியை தக்கவைத்துக் கொள்ளும்படியான மொழியும் கதைப்பரப்பும் என புதுமைக்கும் மரபுப்பிடிப்புக்குமான ஊசலாட்டங்கள் நிறைந்திருந்தன. காலனியத்திற்குள்ளானோரிடம் காலனியம் ஏற்படுத்திய தொடக்கால மாற்றங்களை இந்நாவல்களில் தேடித் தொகுக்க முடியும்.

ஆங்கிலக் கல்வியும் காலனிய அரசமைப்பும் சாதி, மதம், தேசியம் மீதான மயக்கத்தை உள்ளூர் அறிவாளிகளிடம் பெருக்கும் வேலைகளைத் தொடங்கின. அது இலக்கியங்களிலும் பிரதிபலித்தது. பிற்பட்ட மற்றும் அடித்தளமக்களுக்கு தொடக்ககாலக் கல்வி, மேற்கின் இலக்கிய வகைமை சென்றடையாததன் விளைவினால் தமிழ் நாவல்கள்

**ஐந்தமிழ் ஆய்வு மன்றம்,** மதுரை

**திண்டுக்கல் எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறை**

இணைந்து நடத்தும்

மன்றத்தின் பதினைந்தாவது தேசியக் கருத்தரங்கம் 2016 ஏப்ரல் மாதம் 2, 3 சனி, ஞாயிறு

# சான்றிதழ்

ஐந்தமிழ் ஆய்வு மன்றத்தின் பதினைந்தாவது தேசியக் கருத்தரங்கம் ஏற்காடு பார்ஸ் எஸ்டேட்-கிரீன் போர்ட் இன் எனுமிடத்தில் 02.04.2016, 03.04.2016 (சனி, ஞாயிறு) இரு நாட்கள் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முனைவர் / திருமிகு [illegible] அவர்கள் கி. ராஜநாராயணனின் படைப்புகளில் வறுமை எனும் பொருளில் கட்டுரை வாசித்தளித்தார்/அச்சிடக்கட்டுரை வழங்கினார்/பங்கு பற்றினார் என்று சான்றளிக்கப்படுகின்றது.

**முனைவர் மா.கருணாகரன்**
தலைவர்
ஐந்தமிழ் ஆய்வு மன்றம்

ஐந்தமிழ் ஆய்வு மன்றம்
பதிவு எண் 108/2014
நாள்

**முனைவர் வீரா.அழகிரிசாமி**
பொதுச்செயலர்
ஐந்தமிழ் ஆய்வு மன்றம்

**முனைவர் க.நாகநந்தினி**
தமிழ்த்துறைத்தலைவர்
எம்.வி.எம்.அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
திண்டுக்கல்.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

(தரமணி, சென்னை - 600 113.)

# செந்தமிழ் அறக்கட்டளை

இணைந்து நடத்தும்

## நான்காம் பன்னாட்டுக் கருத்தரங்கம்

## (4th INTERNATIONAL SEMINAR) 24.12.2016

## சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி/முனைவர் ........................................................ அவர்கள் "தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் விழுமியங்கள்" என்னும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், செந்தமிழ் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய நான்காம் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கில், ஆய்வாளராக/அமர்வுத் தலைவராகப் பங்கேற்று ..............................

..........................................................................................................................................

என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

செயலாளர்
**மதிப்புறு முனைவர் கவிஞர் சுரா**
(எ) சு.இராமச்சந்திரன்
தலைவர் – செந்தமிழ் அறக்கட்டளை
திருவில்லிபுத்தூர் – 626 135

ஒருங்கிணைப்பாளர்
**முனைவர் நா.சுலோசனா**
உதவிப்பேராசிரியர்
தமிழ்மொழி மற்றும் மொழியியற் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

கருத்தரங்கத் தலைவர்
**முனைவர் கோ.விசயராகவன்**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 600 113.